விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 262 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 21 வெள்ளிக்கிழமை (06.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வாய்க்காலுக்குள் வீழ்ந்து மோ.சைக்கிள் விபத்து

### உருத்திரபுரத்தில் ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து உருத்திரபுரம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் இரவு வீதியின் அருகில் உள்ள வாய்க்கால் ஒன்றுக்குள் விழுந்து குறித்த 15

## மாதகல் கடற்பகுதியில் காணாமல்போன இளைஞன்

### நேற்று சடலமாக கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாதகல் கடற்பகுதியில் படகு விபத்துக்குள்ளான நிலையில், கடலில் மூழ்கி காணாமல்போன இளைஞனின் சடலம் நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

அதேபகுதியைச் சேர்ந்த நாகராஜா பகீரதன் (வயது-21) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம், மாதகல் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் 15

## திருக்குறள் நூல் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

முனைவர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களின் அகவை எண்பதில், திருக்குறள் நூல் வெளியீட்டு விழா யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் 15

# 13 தேர்தல் கால வெற்றுக் காசோலை

### யாழில் அநுர தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

13 நடைமுறைப்படுத்துவது அல்லது 13 பிளஸ் வழங்குவது எனக் கூறுவது தெற்கு வேட்பாளர்களின் தேர்தல் கால வெற்றுக் காசோலை எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க யாழில் தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பிரசாரத்துக்காக ஜனாதிபதி ரணில் நாளை யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் நாளை சனிக்கிழமை சங்கிலியன் பூங்காவில் இடம்பெறவுள்ள பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார். (ம-7)

## யாழில் தீக்காயத்துக்குள்ளான 3 பிள்ளைகளின் தந்தை மரணம்

(கரணவாய்)

யாழில் தீக்காயங்களுக்குள்ளான இளம் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

மடம்வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 37 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையே 15

## நெடுந்தீவில் 4 இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற் பரப்புக்குள் எல்லை 15

## ஈழத் தமிழினத்தின் இறைமையே எமது அரசியல் இலக்காகும்

### பிரித்தானியாவில் சிறீதரன் எம்.பி

(லண்டன்)

ஈழத் தமிழினத்தின் இறைமையே எமது அரசியல் இலக்காகும் எனப் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய வாழ் கிளிநொச்சி மக்களினதும், வட்டக்கச்சி மத்திய 15

## அரச - தனியார் துறையினர் வாக்களிக்க விடுமுறை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க வசதியாக அரச மற்றும் 15

## கண்ணிவெடி வெடித்ததில் நான்கு பெண்கள் படுகாயம்

### மாங்குளத்தில் சம்பவம்

(மாங்குளம்)

கண்ணிவெடி வெடித்ததில் மாங்குளத்தில் நான்கு பெண்கள் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங் 15

அதிமேதகு ஜனாதிபதி கௌரவ
ரணில் விக்கிரமசிங்ஹ அவர்களின் தலைமையில்
செப். 07
மாபெரும் தேர்தல் பிரச்சாரக்கூட்டம்

காலம்: 07.09.2024 சனிக்கிழமை
நேரம் : பி.ப. 1.00 மணி
இடம்: சங்கிலியன் பூங்கா
(முத்திரை சந்தி, யாழ்ப்பாணம்)
இலங்கையில் புகழ்பூத்த இசைக்கலைஞர்களுடைய இன்னிசை நிகழ்வும் நடைபெறும்.
அனைவரும் கட்சி பேதமின்றி அணிதிரளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
-ஏற்பாட்டுக்குழு-
ரணில் விக்கிரமசிங்ஹ
(C-010)

## உடன் அமுலுக்கு வரும் வகையில் 4 இராஜாங்க அமைச்சர்கள் ஜனாதிபதியால் பதவி நீக்கம்

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நான்கு இராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராய் சந்தியிலிருந்து கைதடி சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன் 4 பரப்புக் காணி நிலப்பரப்பு விற்பனைக்குண்டு.

* இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
* உரும்பிராய் சந்தியிலிருந்து ½ Km தூரம்
* வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்தது.

(1874)

**077 288 0152, 077 294 1521**


## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 . 12 . 1939

மறைவு 06 . 09 . 2012

அமரர் **சின்னத்தம்பி தர்மராஜன்**

(ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர்)

ஆண்டுகள் பன்னிரெண்டானாலும்
ஆறவில்லை எம்மனது அப்பாவே!
அன்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எமைக்காத்து கல்வியூட்டி
நன்னிலையில் நிறுத்திய தெய்வமே!
விண்ணுலகில் இருந்து என்றென்றும்
எமை ஆசிர்வதித்து வழி நடத்துங்கள் அப்பா!

41/17, பாடசாலை வீதி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**

(1831)


## பணியாளர் வெற்றிடம்

* கணனி அறிவுடன்கூடிய காட்சியறை விற்பனையாளர்கள் - பெண்கள் (அலங்கார மின் விளக்குகள், மின்சார உபகரணங்கள், மின்சாரப் பொருட்கள்)
  - ✓ EPF/ETF கொடுப்பனவு வழங்கப்படும்
  - ✓ நிரந்தர தொழில்.

❖ சுயவிபரக்கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

(1869)

ESS JEY ELECTRICALS, No.09,
STANLEY ROAD, JAFFNA.

**021-2222564/021-2227430**

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## Village Hotel
**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை ⟹ கொழும்பு
யாழ்ப்பாணம் ⟹ கொழும்பு
இருவழிச் சேவை. (இரவு/ பகல்)

தொடர்புகளுக்கு:
**077 544 8503**

(1868)

## காணி விற்பனைக்கு

யாழ். நல்லூர் முருகன் கோயிலுக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்.
யாழ். திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்.
யாழ். கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 2 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

(1873)

**077 723 2535**

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் வடக்கில் (பலாலி வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில்) 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் தேவையில்லை)

தொடர்புகளுக்கு:
**076 948 6242**

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
47,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(310)

**APEX TRAVELS**
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)


# மு/புதுக்குடியிருப்பு ஐயனார் ஐயப்பன் ஆலய வரலாறு



நீர்வளமும் நிலவளமும் நிறைந்து வயலும் வயல்சார்ந்த இடமும் எழில்மிக்க வனம் சூழ்ந்த ஆதிக்கிராமம் புதுக்குடியிருப்பு கிராமமாகும். பண்டாரவன்னியன் மாவீரனின் வழித் தோன்றல்களும் அவரின் படைகள் பணிபுரிந்தவர்களின் வழித்தோன்றல்கள் வாழும் இடம் புதுக்குடியிருப்பாகும். இங்கு பரம்பரை பரம்பரையாக சைவமக்கள் கூடுதலாக வாழ்கின்றார்கள். இதனால் இங்கு புகழ் பெற்ற முருகன் ஆலயம், உலகளந்த பிள்ளையார் ஆலயம், பழமைமிக்க முத்துமாரி அம்மன் ஆலயம், சிவன் ஆலயம் என்பனவும் அருகாமையில் மஹாவிஸ்ணு ஆலயம், புகழ்பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயமும் சிறப்பாக அமைந்து மக்களைக் காத்து வருகின்றன.

எமது கிராமம் வயல்வேலை செய்வோரும் மாடுகள் வளர்ப்போரும் நிறைந்து வாழ்வதனால் ஊரின் எல்லையில் புகழ்பெற்ற ஐயனார் ஆலயம் அமைந்து இருந்தது. இங்கு மந்தைகளைக் காப்பதும் மக்களைக் காப்பதும் இவரின் அருளாகும். குறிப்பாக மாடுகள், மக்கள் காடுகளில் வழி தவறிவிட்டால் இவருக்கு நேர்த்திக்கடன் வைத்து வழிபட்டால் தொலைந்தவர்கள் வந்து சேர்ந்து விடுவார்கள். இங்குள்ள மக்கள் எதற்கெடுத்தாலும் ஐயனே என அழைப்பது இவரில் உள்ள பக்தியாகும். இந்தக் கோயிலை இங்குள்ள மூதாட்டி ஒருவர் முதலில் தொடங்கி வழிபட்டதாகவும் தொடர்ந்து இங்குள்ள சைவப் பெரியவர்கள் வேலுப்பிள்ளை விதானையார் மார்க்கண்டு செல்லையா, ஐயாக்குட்டி (இங்குள்ள முருகன் கோவில் ஆதி தர்மகர்த்தாக்கள்) போன்றோரால் ஆதரிக்கப்பட்டு வந்தது.

நாட்டில் இடம்பெற்ற போர்ச்சூழ்நிலை, இடப்பெயர்வு என்பவற்றால் சிறிய ஆலயம் முற்றாக அழிக்கப்பட்டு இருந்தது. இந்தநிலையில் முருகன் ஆலய தர்மகர்த்தாக்களின் வாரிசான செல்லையா பாலராசா (ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர், முல்லைத்தீவு.) அவர்களால் பொறுப்பெடுக்கப்பட்டு அவரின் தனிப்பட்ட முயற்சியாலும் மக்கள் பண உதவியினாலும் அவரின் உறவினர்கள் பண உதவி, ஊர் மக்களின் உதவியாலும் ஐயன் ஆலயமும் பதினெட்டுப் படியுடன் கூடிய இலங்கையில் பெரிய ஐயப்பன் ஆலயமும் அமைக்கப்பட்டு எதிர்வரும் 06.09.2024 வெள்ளிக்கிழமை அன்று எமது ஊரின் ஆஸ்தான குருவும் வேதாகம விற்பன்னரும் முத்தமிழ் குருமணியுமான உலகப்புகழ்பெற்ற சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களால் குடமுழுக்கு செய்யப்பட்டு நாட்டுக்கு ஒப்படைக்கப்பட உள்ளது. எனவே மக்கள் அனைவரும் 04, 05ம் திகதிகளில் நடைபெறும் பூசைகளிலும் 06ம் திகதி நடைபெறும் குடமுழுக்கு வைபவத்திலும் கலந்து அருளைப் பெறுமாறு வேண்டுகின்றோம்.

ஆலய தலைவரும் அறங்காவலரும்
திரு.செல்லையா பாலராசா
(ஓய்வுநிலை மக்கள் வங்கி முகாமையாளர்)

குறிப்பு : மேற்படி மூன்று நாட்களிலும் அன்னதானமும், பிள்ளைகளின் நடன நிகழ்வுகளும் இடம்பெறும்.
"சுவாமியே சரணம் ஐயப்பா"

(C-1126)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சூழலுக்கு சாதகமான புதுப்பிக்கத்தக்க வலுவுடன் கூடிய பாரிய மின்சக்தி திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் 2030 ஆம் ஆண்டளவில் நிலையான புதுப்பிக்கத்தக்க வலுவில் 70% இனை காணும் எமது தேசத்தின் இலக்கை அடைவதுடன் ஒளிமயமான மற்றும் நிலைத்தகு எதிர்காலத்தை இலங்கைக்கு பெற்றுக் கொடுப்போம்.

40 வருடகாலமாக ஒட்டுமொத்த இலங்கையர்களது கனவுகளுக்கு வலுவூட்டி ஒளியூட்டினோம், இனி உங்கள் எதிர்காலத்தை நாம் வலுப்படுத்தவுள்ளோம்.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து அல்லது www.ltl.lk/ipo ஊடாக தகவல் தொகுப்பை (Prospectus) பதிவிறக்கம் செய்து மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொது வழங்கலுக்கான கூட்டு மேலாளர்கள்

NDB Investment Bank

CT CLSA Commitment. Trust. Continuity

LTL HOLDINGS LIMITED

(சி-2399)

இலங்கையின் மாபெரும் ஆரம்பப் பொது வழங்கல் (IPO) - 2024 செப்டம்பர் 10 ஆரம்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 தேர்தல்...

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களிடம் 13 ஐ வைத்து வியாபாரம் செய்வதற்கு நான் வரவில்லை. அந்த வியாபாரத்தை செய்யும் நோக்கமும் எனக்கு இல்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் தமிழ் மக்களுக்கு 13 ஐ காட்டி வாக்குகளை பெறும் முயற்சிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

நான் தமிழ் மக்களிடம் 13 தருகிறேன் என வியாபாரத்தைக்கூற மாட்டேன். ஒட்டுமொத்த இலங்கை மக்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்குவதோடு புதிய அரசியலமைப்பை ஏற்படுத்துவேன்.

நாட்டில் நீண்ட காலமாக புரையோடி உள்ள இலஞ்சம் , ஊழல்வாதிகளை அப்புறப்படுத்தி புதிய இலங்கையை உருவாக்குவதே எனது இலக்கு அதற்காகவே மக்கள் எங்களோடு அணி திரண்டுள்ளனர்.

நாட்டு மக்கள் எம்முடன் திரண்டுள்ள நிலையில் சுமந்திரன், சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவு வழங்கி தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சீரழிக்கப் பார்க்கிறார்.

சஜித் பிரேமதாஸ 13 தரப் போகிறாரா அல்லது 13 பிளஸ் தரப் போகிறாரா என்பது தொடர்பில் தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும்.

நாங்கள் நாட்டை கொள்ளை அடிக்க வில்லை நாட்டு மக்களை கடனாளியாக்கவில்லை.

நாட்டைக் கொள்ளையடித்தவர்களும் நாட்டை கடனாளியாக்கியவர்களும் தற்போது ஜனாதிபதி வேட்பாளராக களம் இறங்கிய சஜித் மற்றும் ரணில் பக்கமே உள்ளனர்.

இது ஏன் கூறுகிறேன் என்றால் ராஜபக்ஷர்கள் நாட்டைக் கொள்ளை அடித்து விட்டார்கள் என கூறிய ரணில் தரப்பினரில் சிலர் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஸ பக்கம் உள்ளனர்.

அதேபோல மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் மோசடிகளை மூடி மறைப்பதற்காக ஜனாதிபதித் தேர்தலில் களம் இறக்கப்பட்டுள்ளார்.

இவருடன் ஊழல் மோசடிகளை தடுப்போம் என கூறி வந்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க பக்கத்தில் இருந்த சிலர் நாமல் ராஜபக்ஷவின் பக்கத்துக்கு சென்றுள்ளனர்.

ஒட்டு மொத்தமாகப் பார்க்கப்போனால், நாமல் ,சஜித் ,ரணில் அணிகள் நாட்டை திருடி நாட்டை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்ற நபர்களை உள்ளடக்கிய கூட்டமே பகுதி பகுதியாக மூவர் பக்கமும் பிரிந்து நிற்கின்றனர்.

இவர்களால் நாட்டை அழித்தவர்களை ஒன்றுமே செய்ய முடியாது ஏனெனில் மூவரும் ஒருவரை ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்துள்ளார்கள்.

ஆகவே தேசிய மக்கள் சக்தி நாட்டு மக்கள் எதிர்பார்த்து உள்ள மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு மக்கள் தயாராக இருக்கின்ற நிலையில் வடக்கு மக்களும் இந்த மாற்றத்தில் பங்கெடுக்க தயாராக வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 250 | 250-300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 180 | 150-200 | 200 |
| தக்காளி | 180 | 200 | 240 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 300 | 200 | 200-250 | 200 |
| கோவா | 350 | 320 | 250 | 200 | 300 |
| கரட் | 300 | 300 | 400 | 200 | 350 |
| பூசணி | 80 | 60 | 100 | 60 | 80 |
| புடோல் | 70 | 120 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 200-250 | 240 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 250 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 300 | 220 | 220 | 260 |
| பாகற்காய் | 300 | 350 | 300 | 300 | 300 |
| வெண்டக்காய் | 80 | 80 | 100 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 170 | 160 | 150 | 240 |
| பயற்றங்காய் | 150 | 120 | 120 | 100-150 | 150 |
| லீக்ஸ் | 300 | 350 | 280 | 230 | 350 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 140 | 150 |
| கறிமிளகாய் | 450 | 700 | 600 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 280 | 200 | 100-160 | 150 |
| போஞ்சி | 350 | 600 | 500 | 230 | 600 |
| கத்தரி தம்புள்ள | 250 | 200 | 250 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 200 | 80 | 150 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 250-300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 140 | 120 | 80-120 | 100-130 |
| இராசவள்ளி | -- | 900 | 650 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 90 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 70 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 50 | 90 | 120 |

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சேதுப்பிள்ளை

### (இளைப்பாறிய ஆசிரியை)



காரைநகர் களபூமி விளானையைப் பிறப்பிடமாகவும் காரைநகர் களபூமி திக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை சுப்பிரமணியம் சேதுப்பிள்ளை அவர்கள் 04.09.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதர் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவரான தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்புச் சகோதரியும் சரவணபவான் (UK), சபாநடேசன் (UK), காலஞ்சென்ற சர்வேஸ்வரன், மற்றும் சசிகலா,கவிதா (கணக்காளர் -சுதேசமருத்துவ திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ரதிவதனா, சிவமங்கை,கமலாம்பிகை,பத்மநாதன்(அதிபர்- யா/அல்லைப்பிட்டி றோ.க.த.க வித்தியாலயம்), சிவஸ்ரீசாந்திநாயகம் (ஆசிரியர்- யா/இளையதம்பி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா(பல் வைத்தியர், UK), பிரவியா(சட்டத்தரணி, UK),செந்தூரன் (பொறியியலாளர், UK),மயூரன்(பொறியியலாளர், UK),சாமினி (மருத்துவ பீடம், Oxford), ரகுராமன் (க.பொ.த.உ/த), லக்ஷிகா (யாழ் மருத்துவபீடம்), தர்ஷிகா(CST, ஊவாவெல்லஸ பல்கலைக்கழகம்), சாம்பவி(க.பொ.த.உ/த), பவனிகா (மாணவி, வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.09.2024 வெள்ளிக்கிழமை அன்று அவரது இல்லத்தில் மு.ப 9.30 மணியளவில் கிரியைகள் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப 11.30 மணியளவில் தில்லை இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-1127)

திக்கரை, களபூமி,
காரைநகர்.

077 869 2467

தகவல்:
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி
**நிமலவேணி சிவகுமார்** அவர்களது பாசமிகு தந்தை



## அமரர் செல்லர் பேரின்பநாயகம்

அவர்கள் இறைபதமடைந்த செய்தியை அறிந்து துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(C-1125)


**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை.**

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# மரண அறிவித்தல்

## முருகேசு தனபாலன்

(முன்னாள் கணித ஆசிரியர் - சென் பற்றிக்ஸ் கல்லூரி,
ஒய்வுநிலை உத்தியோகத்தர் - சுகாதாரத் திணைக்களம், கிளிநொச்சி)



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தனபாலன் அவர்கள் (05.09.2024) நேற்று வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

[illegible], புகையிரத வீதி,
[illegible]மடம், யாழ்ப்பாணம்.

(1871)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது 33 வருட ஆன்மீகப் போராட்டப் பாதையிலே...



**தமிழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி.**
அதிசயம் ஆனால் அற்புதம்...
(03.09.2024) அன்று ஈசுர விநாயகர் தமிழ் மக்களின் ஆட்சித்திறப்பை அடியேனிடம் தந்தருளுகின்றார் இத் தர்சனத்தை தமிழ் மக்கள் அனைவர்க்கும் அதிவிசேட செய்தியாக அறியத் தருகின்றேன்.

**என் இனிய நெஞ்சங்களே!**

(08.08.1994) அன்றைய தர்சனத்தில் ஈசுர விநாயகர் தமிழ் மக்களின் ஆட்சித்திறப்பு இதோ என்று எல்லோர் முன்னிலைவிலும் திறப்பைக் காண்பித்து பின் தனது பையினுள் வைத்துக்கொண்டு போகின்றார். இப்போது அத்திறப்பைகொண்டு வந்து அடியேனிடம் தந்துவிட்டு விலைபோகக் கூடியது பத்திரம் என்று கூறியருளிவிட்டு செல்கின்றார். இதன்அர்த்தத்தை நீங்களே கண்டு பிடியுங்கள். அவரின் திருவிளையாடல்களை எப்படிக் கூறுவேன்? அவருக்கு என்ன கைமாறு செய்வேன்?

அதாவது தமிழ் மக்கள் அனைவருக்கும் அடியேன் கூறுவது ஈசுர விநாயகர் 30 வருடங்களுக்கு முன்னர் திறப்பைக் கொண்டு வந்தும் எங்கள் கொடிய கர்மாக்கள் எங்களை வாங்கவிடவில்லை.

இவ்வளவு காலமும் நாங்கள் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்குமா? சொல்லி முடியுமா? இத் தனைக்கும் தெய்வ வழிபாடுகள் தான் எங்கள் எல்லோரையும் கண்ணை இமை காப்பது போல காத்துக் கொண்டேயிருக்கின்றது. இத்தர்சனத்தின் மூலம் கொடிய கர்மாக்கள் முடிவடையும் காலம் நெருங்கிவிட்டது என்பது தான் அர்த்தம். இனிமேல் நடக்கப்போகின்ற சம்பவங்கள் எல்லாமே எங்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே என்பதை உணர்வோமாக.

**என் அன்பு உள்ளங்களே!**

எனது ஆன்மீகப் போராட்டப்பாதையிலே மக்கள்படும் துன்பத்தைப்போக்க அடியேனுக்கு கிடைத்த. கிடைத்தற்கரிய பொக்கிஷங்களை உங்கள் எல்லோருக்கும் அறியத்தர வேண்டியது எனது கட்டாய கடமையாகும்.

1.தானாக வந்து எழுந்தருளிய நவக்கிரக விநாயகர்...
2.தானாக வந்து எழுந்தருளிய கதிர்காமக் கந்தன்...
3.தானாகவந்த அருளொளி விளக்கு...

**நவக்கிரக விநாயகரின் வருகை...**

எங்கள் ஆலயத்தில் உபயம் செய்யும் அன்பரின் நண்பன் தான் விநாயகர் சிலை செய்ததாக இவரிடம் காண்பித்து விநாயகரை எங்கே வைக்கலாம் என்று கேட்டவுடன் இவரும் வேறு ஓர் ஆலயத்தில் வைப்பதற்காக விநாயகரை கண்டி நகரிலிருந்து எடுத்து வருகிறார்கள். ஆனால் விநாயகரோ அவ்வாலயத்தில் எழுந்தருள விரும்பவில்லை.

நாங்கள் விரும்பினாலும் இறைவனும் விரும்ப வேண்டுமல்லவா? அதனால் அவ்வாலயத்தின் வெளி மண்டபத்திலே துணியால் மூடி வைக்கப்பட்டுள்ளார் கண்டியிலிருக்கும் சிலை செய்த நண்பருக்கு உடம்பு எரிவு தொடங்கிவிட்டதாம். உடனே இங்கேயிருக்கும் நண்பனிடம் விநாயகருக்கு பூசை நடக்கின்றதா? எனக்கு உடம்பு எரிகின்றது என்று கேட்டபோது இவர்கள் ஒன்றும் சொல்லவும் முடியவில்லை. செய்யவும் முடியவில்லை இனி எங்களைத் தண்டிக்கப்போகின்றதே என்று பயந்து என்னிடம் ஓடிவந்தார்கள்.

நடந்தவற்றையெல்லாம் சொன்னார்கள். அப்போது நான் அவரைப் பார்க்கவருகின்றேன் என்று கூறி அவர்களுடைய வாகனத்திலே சென்று பார்வையிட்டேன் என்ன அதிசயம்!

பெரிய விநாயகப்பெருமான் இவருக்குரிய இடம் அங்கே இருக்கிறது எடுத்து வாருங்கள் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். அன்றே அவரும் எங்கள் ஆலயத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார். அன்றிலிருந்து அவருக்கு பூசை , வழிபாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஈசுர விநாயகரே அவருக்குரிய இடத்தைக் காட்டியருளினார்.

அதன்படி நவக்கிரகங்கள் இருக்கும் இடத்திலே எழுந்தருளியுள்ளார். நவக்கிரகங்களையெல்லாம். தன்னுள் அடக்கி தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நவக்கிரக விநாயகராக எழுந்தருளி அடியார்கள் எல்லோருக்கும் அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றார். எதற்காக? பெரிய ரூபம் எடுத்து வந்தார்? தமிழினத்தின் கொடிய கர்மாக்களைப் போக்குவதற்காக. எனவே நவக்கிரக விநாயகர் ஈசுர விநாயகரின் மற்றுமொரு வடிவம் என்பதை உணர் வோமாக....

**கதிர்காமக் கந்தனின் வருகை...**

வேல் வைப்பதற்காக மலையைக்கட்டி இருப்பிடம் அமைத்துவிட்டு இங்கிருந்து வேலைக் கொண்டு குடும்பமாக கதிர்காமம் சென்றோம். அங்கு சரியான சனக்கூட்டம் கப்புறாளை ஒருவர் எங்களை மட்டும் கைகாட்டிக் கூப்பிடுகின்றார். எங்களுக்கோ யாரையும் தெரியாது.

முருகன் தான் அழைக்கின்றார் என்று அவரிடம் சென்றோம். என்ன அதிசயம்! உள்ளே போனவர் வேலுடன் வருகின்றார். வேலை எங்களிடம் தந்து பிரசாதமும் தருகின்றார். நாங்களும் பூசையில் வைப்பதற்காக வேல் கொண்டு வந்துள்ளோம் என்றதும் அதனையும் வாங்கி பூசையில் வைத்து எங்களிடம் தந்து எங்களை ஆசிர்வதித்தார்.

உடனே நாங்களும் அவரை விடவில்லை நீங்கள் தான் அங்கு வந்து வேலை வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். வைக்கும் போது சொல்லுங்கள் வருகிறேன் என்றார். இதற்குமேல் இனி என்ன வேண்டும்? வேலுக்கு ஈசுரவிநாயகரின் அருளைப் பெறுவதற்கு அவரடியில் வைத்துப் பூசை வழிபாடுகள் செய்து வந்தோம். தைப்பூச நன்நாளிலே கப்புறாளையும் அவரது மனைவியும் நானும் எனது மனைவியும் கதிர்காமக் கந்தனின் வேலை பிரதிஷ்டை செய்தோம்.

**அருளொளி விளக்குக் கிடைத்தது...**

பறாளாய் முருகன் ஆலயத்தில் வருடாவருடம் அடியேன் கார்த்திகைத் திருவிழா உபயம் செய்து வருவதுண்டு. அங்கு பங்குனி மாதம் இலட்சார்ச்சனை நடைபெறும். ஒருமுறை இலட்சார்ச்சனை நடந்து கொண்டிருந்த வேளை முருகனின் அருள் வேண்டி 108 விடிவிளக்குகள் அடியேன் ஏற்றினேன் அப்போது எங்களோடு இருந்த அன்பர் ஒருவர் உறங்கி விட்டார்.

அவ்வேளை கிழவர் ஒருவர் வந்து விளக்குகளை எண்ணுகின்றாராம். உடனே அவர் எழும்பி கிழவரைத் தேடுகின்றார். கண்டது கனவு என்று மீண்டும் உறங்கி விட்டார்.விழிந்தவுடன் விளக்குகளை எண்ணி வைத்தோம் என்ன அதிசயம்.

ஒருவிளக்கு கூட இருந்தது. கோயில் ஐயாவிடம் நடந்தவற்றைக் கூறினோம். முருகன் தான் ஒருவிளக்கை மேலதிகமாக வைத்துவிட்டு கிழவராக வந்து எண்ணிக் காட்டியுள்ளார் எண்ணிப் பாருங்கள் என்று கோயில் ஐயா சண்முகரத்தின சர்மா அவர்கள் கூறினார்.உடனே உதயன் பத்திரிகையிலே மக்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்தினேன். அதாவது அதிசயம் ஆனால் அற்புதம் என்னும் தலைப்பிலே பயம் வேண்டாம். பயம் வேண்டாம் தமிழினத்தின் கொடிய இருளைப் போக்க அருளொளி விளக்கொன்று கிடைத்திருக்கின்றது என்பதாகும்.

இவையெல்லாம் எனது ஆன்மீகப் போராட்டத்தை பலப்படுத்தி மக்களையும் காப்பாற்றியுள்ளது என்பதை உணர்வோமாக.

**அடியேனை ஆசீர்வதித்த நல்லூர்க் கந்தன்...**

அடியேன் ஈசுரவிநாயகரின் பிரசுரம் அடித்தவுடன் அவரின் திருப்பாதத்தில் வைத்து வணங்கிய பின் முருகப் பெருமானின் பாதாரவிந்தங்களிலும் வைத்து வணங்கி விட்டு நல்லூர் கந்தனிடம் சென்று அவரையும் வணங்கி பின் அங்கே ஐயாவின் பிரசுரத்தை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும் அடியார் கூட்டத்தினருக்கு கொடுத்து விட்டுத்தான் மறு இடங்களுக்குக் கொடுப்பது வழமை.

அவ்வாறே ஒருமுறை நல்லூர்க் கந்தனை வணங்கி விட்டு வெளியே வரும்போது வெளி மண்டபத்தில் துறவி ஒருவர் இருந்தார். அடியேனைத் தன்னிடம் வரும்படி அழைத்தார். நானும் அவரிடம் சென்றேன்.

நீ ஒரு ஆன்மீகவாதி நீ நினைப்பதெல்லாம் நடக்கும். யார் என்ன சொன்னாலும் நீ உன்பாதையிலேபோ என்று அடியேனை ஆசிர்வதித்தார். துறவி வேடத்தில் இருந்தது முருகன் தான் என்பதை உணர்ந்து கொண்டேன்! நல்லூர் கந்தா இவ்வளவும் போதும். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் வந்து அடியேனை ஆசிர்வதித்தாய். இதற்கு மேல் என்ன வேண்டும்? என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே என்று நாயனார் இறைவனை நினைத்து உருகிப்பாடுகின்றார். அதுபோல் அடியேனும் நினைத்துக் கொண்டு ஆனந்தத்தில் வெளியே வந்தேன். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே என்னும் திருமூலர் வாக்கை உணர்வோமாக.

எங்களுக்கு அமையப்போகும் ஆட்சி ஈசுர விநாயரின் அருளினால் மட்டும் தான் கிடைக்கும். இறையருளினால் கிடைக்கும் ஆட்சி எப்படியிருக்கும் என்று புராணப் பாடலைக் காட்டியருளினார். அதாவது...வான்முகில் வளாது பெய்யும் மலிவளம் சுரக்கும் மன்னன் கோன் முறை அரசு செய்வான் குறைவிலாது உயிர்கள் வாழும் நான்மறை அறங்கள் ஓங்கும் நற்றவம் வேள்வி மல்கும் மேன்மை கொள் சைவநீதி உலகமெல்லாம் விளங்கும். என்ன ஆச்சரியமாக இருக்கின்றதா? யாரும் எதிர்பாராமல் நடக்கும் காரியங்கள் யாவும் இறைவனால் நடக்கின்றது என்பதை உணர் வோமாக.

"பார் தெரியுது பறாளயான் பதி பக்தர்குறை தீர்க்கும் சந்நிதி "

**சோழியூரான்-பிறைசூடிக்குரு,**
**(ஆன்மீகவாதியும் சந்ததிப் பூசகரும் பரம்பரைப்பரிபாலகரும்)**

இன்று 6.9.2024(ஈசுரவிநாயகரின் பாற்காவடித் தினம்.)

பாலாபிஷேக நேரம் 7.00 மணிமுதல் 10.00 மணி வரை. சதுர்த்தி உற்சவம் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று விசேட பூசை வழிபாடுகளுடன் சுவாமி வீதியுலா இடம்பெறும்.

(1867)

# இராசிபலன்


06.09. 2024
ஆவணி 21, வெள்ளிக்கிழமை
திருதியை பிற்பகல் 1.33 மணிவரை

அத்தம் முற்பகல் 9.08 மணிவரை
சுபநேரம் -6.04-7.34 மணிவரை
இராகுகாலம்10.34-12.04 மணிவரை

சந்திராஷ்டமம் - சதயம்.


**வளவன்**


மேஷம்
அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல்நலம் சீராகும், தொழிலில் இடையூறாக இருந்தவர்கள் விலகுவர், புதிய பொருட்களை வாங்கும் நிலையுண்டு.


ரிஷபம்
எதிர் காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தினரின் அன்பைப் பெறுவீர்கள், தனவரவு திருப்தி தரும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.



மிதுனம்
நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வாகனப்பழுது செலவு குறையும், பெற்றோர் நலனில் அக்கறை கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


கடகம்
இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழிலில் தொல்லை தந்தவர்கள் விலகுவார், புதிய முயற்சிகள் கைகூடும், பெரியோர்களின் கௌரவம் கிடைக்கும்.


சிம்மம்
செய்தொழில் மேன்மையுண்டு, ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும்.



கன்னி
ஆரோக்கியம் சம்மந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.


துலாம்
எடுத்த காரியங்களை நிறைவேற்ற ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் அலைய நேரிடலாம், பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.


விருச்சிகம்
உறவுகள் பகை அகலும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்


தனுசு
நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடித்து முன்னேற்றம் காண்பீர்கள், உயர்வான வாழ்க்கையில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.


மகரம்
நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த அனுகூலங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.


கும்பம்
நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை, பிரயாண பயமுண்டு.


மீனம்
வழிபாடு ஆனந்தம் தரும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய நன்மையுண்டு.

**செருக்கை விட பணிவு அதிக லாபம் அடைகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்-2024

## அடுத்தவரின் ஆலோசனைகளைப் பெறத் தயங்காத தனுசு இராசியினரே!




எந்தச் சூழ்நிலையிலும் அடுத்தவரின் ஆலோசனைகளைப் பெற தயங்காத தனுசு இராசி அன்பர்களே! நீங்கள் நேர்மையாக வாழ வேண்டும் என எண்ணுபவர்கள். இந்த மாதம் இராசிநாதன் குரு சுக்கிரன் வீட்டில் அமர பாக்கியாதிபதி சூரியன் - சப்தம தொழில் ஸ்தானாதிபதி புதனுடன் பாக்கிய ஸ்தானத்தில் இணைந்திருக்கிறார். இராசியைப் பார்க்கும் செவ்வாய் உங்களுக்கு யோகத்தை அள்ளித்தர போகிறார். வெளியூர் பயண வாய்ப்புகள் உண்டாகலாம். மனதில் தேவையற்ற எணணங்கள் ஏற்படும். ஆனாலும் உங்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கையால் அனைத்துத் தேவை களையும் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.


வழக்குகளில் சாதகமான நிலை காணப்படும். திடீர் செலவு உண் டாகலாம். காரியங்களில் தடை தாமதம் ஏற்படும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்காமல் சற்று மந்தமாகக் காணப்படும். பணவரத்து தாமதமாகும். யோசித்துச் செய்யும் காரியங்கள் சாதகமான பலன் தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உழைப்பு அதிகமாகும். முயற்சிகள் பயன்தராமல் போகலாம். சாதாரணமாக செய்யக்கூடிய காரியங்களைக் கூட அதிகமாக முயற்சிகள் எடுத்து செய்ய வேண்டியதிருக்கும்.

குடும்பத்தில் இருப்பவர்களால் வீண்தொல்லைகள் ஏற்படலாம். தாய் வழி உறவினர்களிடம் வீண் மனஸ்தாபம் உண்டாகலாம். கணவன், மனைவிக் கிடையே கருத்து வேற்றுமை வரலாம். பிள்ளைகள் மேல் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

பெண்களுக்கு வீண் மனக் கவலை உண்டாகலாம். காரியங் களில் தடை, தாமதம், வீண் செலவு ஏற்படலாம்.

கலைத்துறையினருக்கு புத்தி சாதுரியத்தால் எதையும் சமாளிப் பீர்கள். வீண் அலைச்சல் ஏற்படும். நீங்கள் நினைப்பதுபடி மற்ற வர்கள் நடந்து கொள்ளாததால் பதற்றம் ஏற்படலாம். தொழில் தொடர்பான பயணங்கள் அதனால் அலைச்சல் ஏற்பட லாம். அரசியல் துறையினருக்கு பணிகளில் இடையூறுகள் ஏற்படலாம். பழைய பாக்கிகள் வசூலில் தாமதமான நிலை காணப் படும்.

வேலைச் சுமை அதிகரிப்பதுடன் அலைச்சலும் அதனால் சோர்வும் உண்டாகும். சொன்ன சொல்லை எப்பாடுபட்டாவது காப்பாற்றுவீர்கள். ஒரு சில பணி காரணமாக வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடலாம். மாணவர்களுக்கு கல்வியில் மந்தமான



நிலை மாற கூடுதல் கவனத்துடன் பாடங்களைப் படிப்பது நன்மை தரும்.

**பரிகாரம்:** வியாழக்கிழமை தோறும் உங்களுக்குப் பிடித்த குருவின் கோவிலுக்குச் சென்று வணங்கி வாருங்கள் :

**அதிஷ்ட கிழமைகள்:** வளர்பிறை: ஞாயிறு, செவ்வாய், வியாழன் தேய்பிறை: செவ்வாய், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 1, 27, 28

**அதிஷ்ட தினங்கள்:** 20, 21, 22

## வாழ்க்கையில் நேர்கோட்டில் பயணிக்கும் மகர இராசியினரே!




வெட்டு ஒன்று துண்டு இரண்டு என வாழ்க்கையில் நேர்கோட்டில் பயணிக்கும் மகர இராசி அன்பர்களே! நீங்கள் தனித்தன்மை கொண்டவர்கள். இந்த மாதம் இராசிநாதன் சனி பலமாக இருக்கிறார். யோக பலனை அள்ளித்தரும் சுக்கிரன் தொழில் ஸ்தானத்தில் இருப்பதால் பல வகையிலும் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். நீண்ட நாட்களாக இருந்து வந்த வேதனையும் சோதனையும் மாறும். உடல் ஆரோக்கியம் வலுப்பெறும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. அரசாங்க காரியங் களில் இருந்த தடை நீங்கும். புத்தி சாதுரியம் அதிகரிக்கும்.

தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் தொழில் வியாபாரத்தில் உயர்வுகள் உண்டாகும். பணியாளர்கள் மூலம் காரிய அனுகூலம் ஏற்படும். அனுபவப் பூர்வமான அறிவு கைகொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் எளிதாக பணிகளை செய்து முடிப்பார்கள். செயற்திறன் அதிகரிக்கும். உங்களுக்கான வேலைகளைச் சரியான நேரத்தில் செய்து முடித்து பாராட்டுகள் பெறுவீர்கள்.

குடும்பஸ்தானத்தில் சனி இருப்பதால் குடும்பத்தில் இருப்பவர்கள் ஏதாவது குறை சொல்லியபடி இருப்பார்கள். வீட்டிற்கு தேவையான பொருட்கள் சேரும். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவது நன்மையை தரும்.

பிள்ளைகள் எதிர்காலம் குறித்து தேவையான பணிகளை கவனிப்பீர்கள். பெண்களுக்கு புத்திசாதுரியம் அதிகரிக்கும். பயணங்களின் போது கவனம் தேவை. வேலைக்கு செல்லும் பெண்கள் தங்கள் பொருட்களை பத்திரமாக வைத்திருப்பது நல்லது.

கலைத்துறையினருக்கு திடீர் கோபங்கள் உண்டாகலாம். நிதானமாக இருப்பது நல்லது. புத்திசாதுரியத்தால் எதையும் சமாளிப்பீர்கள். எந்த ஒரு விடயத்தையும் தள்ளிப் போடாமல் உடனே முடிவு காண்பது நல்லது. தெளிவான சிந்தனை தோன்றும். எந்த காரியத்தையும் செய்யும் முன் ஆலோசனை செய்து அதில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள்.

அரசியல் துறையினருக்கு சாமர்த்தியமான உங்களது செயல் கண்டு மற்றவர்கள் ஆச்சரியப்படுவார்கள். முக்கிய நபர்கள், அந்தஸ்தில் உயர்ந்தவர்கள் நட்பு கிடைக்கும். அதனால் கௌரவம் அதிகரிக்கும். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தரும். புதிய நபர்களின் அறிமுகம் உண்டாகும். அதனால் நன்மை உண்டாகும்.

மாணவர்களுக்கு கல்வியில் இருந்த தடைகள் நீங்கும்.



திறமை வெளிப்படும். ஆசிரியர்களுடன் நல்ல உறவு ஏற்படும். பெற்றோர் ஆதரவாக இருப்பார்கள்.

**பரிகாரம்:** சனிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் ஆலயத்திற்கு சென்று வாருங்கள். நீராஞ்சன தேங்காய் தீபம் ஏற்றவும் ;

**அதிஷ்ட கிழமைகள்:** வளர்பிறை: ஞாயிறு, செவ்வாய், வியாழன் தேய்பிறை: செவ்வாய், வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 2, 3, 4, 29, 30

**அதிஷ்ட தினங்கள்:** 23, 24

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான் ஜனாதிபதியாகியதும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை

## நாமல் ராஜபக்ஷ அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு - கிழக்கு பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பிரச்சினைக்கு பதில் வழங்க தான் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ தொடர்ந்து கருத்து வெளியிடுகையில், காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினைக்கு நிச்சயமாக ஒரு பதில் வழங்கியாக வேண்டும்.

தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்த ஆணைக்குழுக்களை நியமித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இதற்கு பதில் வழங்க வேண்டும். அந்தப் பதிலை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். நான் ஜனாதிபதியாகியதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன் எனவும் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (நி)



# பிரதமர் தலைமையில் உதயமானது புதிய அரசியல் கூட்டணி

(கொழும்பு)

ஜனநாயகத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசியல் சக்தி தலை தூக்கியுள்ளதாகவும் ஜனநாயகத்தை பாதுகாக்கவே புதிய அரசியல் கூட்டணியை ஸ்தாபித்துள்ளோம் எனவும் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியின் செயலாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் புதிய அரசியல் கூட்டணியொன்று நேற்று வியாழக்கிழமை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அரசியல் கூட்டணி "கிண்ணம்" சின்னத்தில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் ரமேஷ் பத்திரன,69 இலட்ச மக்களாணை எம்முடன் தான் உள்ளது. இடம் பெறவுள்ள எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி கிண்ணம் சின்னத்தில் போட்டியிடுவோம் என குறிப்பிட்டார்.

பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பத்து அரசியல் கட்சிகள் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


இன்று(06.09.2024) வெள்ளி
"குடமுழுக்கு" காணும்

பருத்தித்துறை,
மாதனையூர் விநாயகர் ஆலயம்

பச்சை படர்ந்து பரந்த நெடுவயலின்
பக்கமாய் மேற்றிசையில் மேதினியோர்
மெச்சும் கலையழகு நிறைந்து துலங்கும்
மேலான சித்திரக் கோயிலொன்று
அத்திமுகத் தழகன் ஆறுமுகன் அண்ணன்
ஆனந்த நடன விநாயகனுக்கென்று
வித்தக மாதனையூர் மண்ணில் அமைந்ததே
வியந்து ரசித்திட விரைந்திடுவீர்

பார்க்கையில் பரவசம் ஊட்டிடும் தெய்வீக
நீர்க்கலசம் ஊர்வலமாய் கொண்டு வந்தே
சேர்ந்திடும் இசை மழையின் இனிமையில் விநாயகனுக்கு
செப்பொணாப் பெருமை குடமுழுக்கின்று!
ஊர் திரண்டு ஒரு முகமாய் கைகூப்பி
உள்ளமதில் பக்திதனைத் தேக்கி
சீர் பொலிந்து வாழ்வு சிறக்குமென்றே
சேர்மகிமைக் குடமுழுக்கைக் காணலுற்றார்

கருதிய ஒன்றினைக் கலங்காமல் முடிக்கவுன்
காலடியைப் பற்றுகின்ற அன்பர்தமை
வருகின்ற நேர்த்திக் கடனுடைய பக்தர்களை
வாயார உன்னாமம் புகழ்வோரை
பெருகிடும் கருணைக் கண்களால் உய்விக்கும்
அருள்தரு ஞான கணபதிதான்
திருமிகு மாதனையூர் மக்களும் மற்றோரும்
தினமும் போற்றுகின்ற தெய்வமன்றோ!

[1820]

மாதனையூர் இரா.தில்லைராஜன்



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத் திரம்: மிருகசீரிடம்<br>கி.பா 25 உயரம் :5'6"<br>தகைமை/தொழில்: A/L, பிரான்ஸ்<br>எதிர்பார்ப்பு: பிரான்ஸ் மட்டும்<br>தொ.இ: B/14759 | பிறப்பு:1994-இந்து<br>நட்சத் திரம் : அனுசம்<br>2இல் செவ்<br>கி.பா: 15 3/4 உயரம் : 5'<br>தகைமை/தொழில்: BA final year<br>எதிர்பார்ப்பு: வெளிநாட்டு மணமகன்<br>தொ.இ: G/14799 |
| பிறப்பு:1993-இந்து<br>நட்சத் திரம்:அத்தம்<br>1இல் செவ்<br>கி.பா: 27 உயரம் :5'9"<br>தகைமை/தொழில்: Bsc, Engineer(pvt)<br>எதிர்பார்ப்பு: Engineer, Bsc IT, Doctor<br>தொ.இ: B/14762 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 63 3/4 உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, சித்த மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், இஞ்சினியர், விரிவுரையாளர் , வங்கி<br>தொ.இ: G/14703 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத் திரம்: உத்திரட்டாதி<br>11இல் சூரி செவ்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்: A/L, கிராம சேவகர்<br>எதிர்பார்ப் பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14763 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>12இல் செவ்<br>கி.பா: 39 1/2 உயரம் :5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சொந்த தொழில்<br>தொ.இ: G/14704 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


# சம்பள உயர்வு சுற்றறிக்கையை தேர்தலுக்கு முன் வெளியிட வேண்டும்

## ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

ஆசிரியர்கள் உட்பட அரச ஊழியர்களின் உத்தேச சம்பள அதிகரிப்புகளை அறிவிக்கும் சுற்றறிக்கையை செப்ரெம்பர் 21 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடுமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

செய்தியாளர்களிடம் பேசிய அதன் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், சுற்றறிக்கையை வெளியிடுவது தேர்தல் சட்டத்தை மீறும் செயல் அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் மேடைகளில் கூறுவது உண்மையாக இருக்குமானால், தேர்தல் திகதிக்கு முன்னதாக சுற்றறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும்.

ஏற்கனவே ஓய்வூதியக் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளமையால் அரச பணியாளர்களுக்கான சுற்றறிக்கையை வெளியிட முடியும்.

சம்பள முரண்பாடுகளை நீக்கக் கோரி ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் கடந்த ஒக்டோபர் 24 ஆம் திகதி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதன்போது, அரசாங்கம் தீர்வுகளை வழங்கவில்லை ஆனால் அவர்களுக்கு எதிராக கண்ணீர்ப் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகங்களை அரசாங்கம் நடத்தியது.

எனினும் தற்போது அரசாங்கம் உறுதிமொழிகளை வழங்கியுள்ளதாக ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# பல்கலைக்கழகங்களுக்கான வெட்டுப்புள்ளிகள் விரைவில் வெளியிடப்படும்- மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

எதிர்வரும் 15 நாட்களுக்குள் பல்கலைக்கழகங்களுக்கான தெரிவு வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் எனப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

2028 கல்விப் பொது தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த பல்கலைக் கழகங்களுக்கான தெரிவு வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வெட்டுப் புள்ளிகளை வெளியிடும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டப்பணியில் உள்ளதாக அதன் உபதலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அதிகரிக்கும் ரஷ்யாவின் இராணுவ பலம் பாதுகாப்பை உயர்த்தியுள்ள ஜேர்மனி

(பேர்லின்)

ரஷ்யாவின் இராணுவ பலம் அதிகரித்து வரும் நிலையில் அச்சுறுத் தல்கள் ஏற்படலாம் என்ற அச்சத்தில் ஜேர்மனி தனது பாதுகாப்பு நடவ டிக்கைகளை மேம்படுத்தி வருகிறது.

இதன்படி, நேற்று முன்தினம் ஐரிஸ்-டி வான் பாதுகாப்பு அமைப்பை ஜேர்மன் நிறு வியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

குறித்த பாதுகாப்பு அமைப்பானது எதிரி நாடு களால் ஏவப்படும் ரொக்கெட் , ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை எதிர்கொள்வதற்காக நிறு வப்பட்டுள்ளதாகக் கூறப்ப



டுகிறது.

இந்த நிலையில், ரஷ் யாவின் ஆயுதபலம் அதி கரித்து வருவதை உணர்ந்துள்ள ஜேர்மன் சான்ஸலரான ஓலாஃப் ஷோல்ஸ், அதனை அறிந் தும் பாராமுகமாக இருக்க முடியாது என தெரிவித் துள்ளார்.

அவ்வாறு கவனக்குறை வாக செயற்பட்டால் தனது நாட்டின் அமைதிக்கு பங் கம் உருவாகி விடும் என் றும் அதனை தன்னால் அனுமதிக்க முடியாது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐந்து முதல் எட்டு ஆண்டுகளில் நேட்டோ நாடுகளை தாக் குவதற்கு ரஷ்யா இரா ணுவ ரீதியாக தயாராக இருக்கலாம் என நேட்டோ அதிகாரிகள் தெரிவித் துள்ள நிலையில் போலந் தும் தனது பீரங்கி குண்டு களின் உற்பத்தியை அதி கரிக்க தீர்மானித்துள் ளது.

அதன்படி, போது மான இருப்பை உறுதி செய்யும் வகையில் 155 மிமீ பீரங்கி குண்டுகள் உற்பத்தியை அதிகரிக்க போலந்து தயாராகியுள் ளதாக தெரிவிக்கப்படு கிறது. (நி)

## ஆதரவ... ட்ரூடோ...


(ஒட்டாவா)

கனடாவில் பிரதம...
லிபரல் அரசாங்கத...
கட்சி தனது ஆதரவ...
நேரமும் அரசாங்க...

ஜக்மீத் சிங் என்பவர் தலைமை யில் இயங்கும் புதிய ஜனநாயகக் கட்சியே அரசாங்கத்திற்கு அளித்து வந்த ஆதரவை திரும்பப்பெற்றுள் ளது.

ஆனால் ஆட்சிக்கு ஆபத்து அல்லது தேர்தல் உருவாகும் சூழல் எதுவும் தற்போது ஏற்பட வாய்ப்பில்லை என அரசியல் நிபு

## புருனே சுல்தானிடம் 7000 சொகுசு கார்கள்



(புருனே)

புருனே சுல்தான் ஹசனல் போல்கியா உலகின் மிகப்பெரிய கார் சேகரிப்பின் உரிமையா ளர் என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக் கின்றன.


இவரது கார் சேகரிப்பில் சுமார் 7000 சொகுசு கார்கள் இருப்பதாக அந்த ஊடகங்கள் செய்தி வெளி யிட்டுள்ளன.

இவரது கார் சேகரிப் பின் மதிப்பு சுமார் 5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என வெளி நாட்டு ஊடகங்கள் தெரி வித்துள்ளன. அவரது கார் சேகரிப்பில் பென்ட்லி, ஃபெராரி, போஷ், ரோல்ஸ் ராய்ஸ் மற்றும் ஒஸ்டன் மார்டன் கார்கள் அடங்கும் என்று கூறப்படுகிறது.

இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு புருனே நாட்டுக்கு சென்றார், அதன் மூலம் உலகத்தின் கவ னம் புருனே சுல்தான் மீது திரும்பியுள்ளது. (நி)

## பயங்கரவாதிகளின்... 81 பேர் பரிதாப...

நைஜீரியாவி...



(நைஜர்)

நைஜீரியாவில் போகோ ஹாரம் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 81 பேர் பலியா கியுள்ளதாக சர்வதேச ஊட கங்கள் செய்தி வெளியிட்டுள் ளன.

ஆபிரிக்க நாடான நைஜீ ரியாவில் கடந்த சில ஆண்டு களாக போகோ ஹாரம் பயங் கரவாதிகள் வன்முறைச் செயல் களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தாக்குதல் நடத்தி இதுவரை பல்லாயிரம் பேரை கொன்று குவித்துள்ளனர்.

இந்த நிலையில், நைஜீரியா வின் வடகிழக்குப் பகுதியில்


## வெறும் 30 நிமிஷ தூக்கம் அதிசயிக்க வைக்கும் ஜப்பானியர்

(டோக்கியோ)

ஜப்பானில் ஒரு மனிதர் நாள் ஒன்றுக்கு வெறும் 30 நிமிடங்கள் மட்டுமே உறங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார்.

ஒவ்வொரு மனிதனின் ஆரோக்கியத்துக்கும் தூக் கம் என்ற ஓய்வு மிகவும் அவசியம். நாள் ஒன்றுக்கு 8 மணி நேரம் தூக்கம் வேண்டும் என்பது மருத் துவர்களின் அறிவுறுத் தல்.

சிலருக்கு 8 மணி நேரம் போதாது என்று கூறி இஷ்டத்துக்கும்





படுக்கையில் உருள்வதும் உண்டு.

இந்நிலையில் ஜப்பா னில் ஒருவர் நாள் ஒன் றுக்கு வெறும் 30 நிமி டங்கள் மட்டுமே தூங்கி ஆச்சரியப்படுத்தி வரு கிறார். அதுவும் 12 ஆண்டுகள் அவர் இப்படித்தான் தூங்குகிறார்.

ஆச்சரியம் காட்டும் அவ ரின் பெயர் டெய்சுகே ஹோரி, வயது 40. இவ ருக்கு ஒருநாளில் வெறும் 30 நிமிடங்கள் உறக்கம் போதுமானதாக உள்ளது. அந்த அரைமணி நேரம் தூக்கத்துக்காக சிறப்பு பயிற் சிகள் எடுத்துக் கொண்ட தாக கூறுகிறார்.

ஒரு மனிதனின் உட லுக்கு இயற்கையாகவே 8 மணி நேரம் தூக்கம் மிக வும் அவசியமானது, அதற்கு மாறாக பின்பற் றப்படும் செயல்கள் உடல் நலனில் பாதிப்பை ஏற்ப டுத்தும் என்று மருத்து வர்கள் எச்சரித்துள்ள னர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வை விலக்கியது கூட்டணி கட்சி

# ...ா அரசாங்கத்திற்கு கடும் நெருக்கடி

**...ரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான சிறுபான்மை ...ங்கத்திற்கு ஆதரவு அளித்து வந்த புதிய ஜனநாயகக் ...தரவை விலக்குவதாக அறிவித்துள்ள நிலையில் எந்த ...ாங்கம் கவிழலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.**



...ணர்கள் தெரிவிக்கின்றனர்.

இருப்பினும், பட்ஜெட்டை நிறை...வேற்றவும் நம்பிக்கை வாக்கெ...டுப்பில் இருந்து தப்பிக்க வேண்டும் என்றால் புதிதாக ஒரு கட்சியின் ஆதரவை ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கம் பெற வேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.


கடந்த 2022 முதல் லிபரல் அரசாங்கத்திற்கு அளித்து வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக ஜக்மீத் சிங் அறிவித்துள்ளார். தற்போதைய சூழலில் ஜஸ்டின் ட்ரூடோவால் எதிர்கட்சியான கன்சர்வேட்டிவ்களை எதிர்கொள்ள முடியவில்லை என ஜக்மீத் சிங் குற்றஞ்சாட்டியுள்ளார்.

2022இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 2025 வரையில் ஜஸ்டின் ட்ரூடோ அரசாங்கத்திற்கு புதிய ஜனநாயகக் கட்சி ஆதரவளிக்கும். பதிலுக்கு மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

2015 நவம்பர் முதல் ஆட்சியில் இருக்கும் ஜஸ்டின் ட்ரூடோ தற்போது மிக மோசமான பின்னடைவை சந்திப்பார் என்றே ஆய்வுகளில் தெரிய வருகிறது. புதிய ஜனநாயகக் கட்சியின் அழுத்தம் காரணமாகவே தேசிய அளவிலான பல் சுகாதார திட்டம் நடைமுறைக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. (நி)

## ...ளின் தாக்குதலில் ...தாபமாகப் பலி

### ...வில் சம்பவம்



உள்ள கிராமத்தினரை குறிவைத்து பயங்கர ஆயுதங்களுடன் போகோ ஹாரம் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 81 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

படுகாயம் அடைந்த பலர் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பலர் மாயமாகினர் என்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்கலாம் என அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பூமியின் வளிமண்டலத்தில் வெடிப்புக்குள்ளான விண்கல்

(வோஷிங்டன்)

பூமியின் வளிமண்டலத்தில் வெடிப்புக்குள்ளான 9 ஆவது விண்கல்லை மனிதகுலம் கண்ணுற்றிருப்பதாக நாசா அறிவித்துள்ளது.

ஃபிலிப்பின்ஸ் - லூசானா தீவுக்கு மிக அரு கில் வான் பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை விண்கல் ஒன்று எரியுண்டது.

இதனை எதேட்சையாக சிலர் காணொளியாகப் பதிவு செய்திருந்த நிலையில், அந்த காணொளி சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகிறது.

2024ஆர்.டபிள்யு.ஐ என்று பெயரிடப்பட்டுள்ள இந்த விண்கல், 1 மீற்றர் நீளமுடையது.



இவ்வாறு ஒரு மீற்றருக்கும் குறைந்த நீளம் கொண்ட விண்கற்கள் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பூமியில் விழுகின்ற போதும், அவை பூமியின் வளிமண்டலத்திலேயே எரிந்து அழிகின்றன.

எனினும் அவை எரிந்து அழிவதற்கு முன்னர் மனிதர்களால் அவதானிக்கப்படுவது மிகவும் அரிதாகவே நிகழ்கின்றது.

அவ்வாறு மனித குலத்தினால் அவதானிக்கப்பட்ட 9 ஆவது விண்கல் இது வென்று நாசாவின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## அமெரிக்க பாடசாலையில் துப்பாக்கிச் சூடு

### 4 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின், ஜோர்ஜியா மாநிலத்தில் அமைந்துள்ள உயர்நிலை பாடசாலையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக் கிச் சூட்டில் இரண்டு சிறார் கள் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவின் ஜோர்ஜியா மாநிலத்தில், அப்பலாஜி என்ற இடத்தில் அமைந்துள்ள உயர் நிலைப் பாடசாலையிலேயே இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் 14 வயதுடைய கொல்ட் க்ரே எனும் மாணவன் என ஜோர்ஜியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் நடத்திய தாக்குதலில் இரண்டு மாணவர்கள், இரண்டு ஆசிரியர்கள் உள்ளிட்ட நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், இந்தத் தாக்குதலில் 9 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலை அடுத்து குறித்த பாடசாலையின் பாதுகாப்பை பலப்படுத்திய பொலிஸார், அங்கிருந்து மாணவர்களை விரை வாக வெளியேற்றியதோடு, துப்பாக்கிதாரியையும் சுற்றி வளைத்து கைது செய்துள்ளனர். அமெரிக்காவில் தொடர்ச்சியாக பாடசாலைகளில் துப்பாக்கிச்சூடு நடத்தப்படும் கலாசாரம் தொடர்ந்து வரும் நிலையிலேயே, இந்தத் தாக்குதலும் இடம்பெற்று அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஆண்டில் இது வரை அமெரிக்காவின் 45 பாடசாலைகளில் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகவும் ஆனால், இந்த சம்பவமே மிகவும் மோசமானது என் றும் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜோர் ஜியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு வீடாக சென்று தேர்தல் பிரசாரம்

## தடை விதித்த தேர்தல் ஆணைக்குழு

(கொழும்பு)

**தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வீடு வீடாகச் செல்வதை உடனடியாகத் தடுக்குமாறு பொலிஸாருக்கு தேர்தல் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.**

இதுபோன்ற பிரசாரங்கள் செய்வதைத் தடுக்க பொலிஸார் நடமாடும் ரோந்துப் பணியை அதிகரிக்கவும் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

குறிப்பிட்ட சில அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வீடு வீடாகச் சென்று வருவதாக ஏராளமான புகார்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற செயல்கள் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கு இடையூறாக இருப்பதாக ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை சட்டவிரோதமான முறையில் நடத்தப்படும் தேர்தல் அலுவலகங்கள் தொடர்பில் சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு தேர்தல் ஆணைக்குழு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளது. (ஙி)

# குற்றவாளிகள் என கண்டறியப்பட்டவர்களே அண்மைய ஆட்சியாளர்கள்- அநுர

(கொழும்பு)

நாட்டின் அண்மைய கால ஆட்சியாளர்கள் உயர் நீதிமன்றினால் குற்றவாளிகள் எனக் கண்டறியப்பட்டவர்கள் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜா- எல பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.



முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை உயர்நீதிமன்றம் குற்றவாளிகள் என அறிவித்துள்ளது.

பொலிஸ் மா அதிபர் விடயத்தில் உயர் நீதிமன்ற தீர்ப்பை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளவில்லை.

பதில் பொலிஸ் மா அதிபர் ஒருவரை அவர் நியமிக்கவும் இல்லை.

இவ்வாறானவர்களின் தவறான ஆட்சி காரணமாக, வெளிநாடுகளில் இலங்கை மீதான தவறான புரிதல் ஏற்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டில் இலங்கைக்கு 23 இலட்சம் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் வந்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் 40 இலட்சம் சுற்றுலாப்பயணிகளைக் குறுகிய காலத்தில் இலங்கைக்கு அழைத்துவருவதே முதன்மை இலக்காக உள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ஙி)

# குறைவடைந்தது பணவீக்கம்

## மத்திய வங்கி ஆளுநர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்து இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று முன்தினம் விளக்கமளித்துள்ளார்.

இலங்கையில் பணவீக்கம் 5 சதவீதமாக தற்போது குறைக்கப்பட்டுள்ளதுடன் கொள்கை வட்டி வீதத்தையும் குறைக்க முடிந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மத்திய வங்கிச் சட்டம் மற்றும் அதனை ஒழுங்குபடுத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட புதிய சட்டங்கள் வங்கி கட்டமைப்புக்கு பாரிய அனுகூலமாக அமைந்துள்ளதாகவும் மாற்று விகிதத்தை ஸ்திரப்படுத்துவதன் மூலம் ரூபாயை வலுப்படுத்த முடிந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஙி)

# இன்று ஒரு தகவல் 223



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உண்மையும் தர்மமும்

எப்பவும் உண்மையே பேச வேண்டும். அது தான் நல்லது என்று ஒருவரிடம் சொன்னேன்.உடனே அவர் என்னிடம் சண்டைக்கு வந்து விட்டார். சேர் உங்கள் உபதேசம் எல்லாம் ஏமாந்தவர்கள் யாராவது இருந்தால் அவர்களிடம் சொல்லுங்கள் சேர்.

எனக்கு வேண்டாம் ஆளை விடுங்கள் என்று சொல்லி விட்டு ஓடப் பார்த்தார். நான் விடவில்லை என்ன விடயம் சொல்லி விட்டு அதன் பின்பு ஓடுங்கள் என்றேன். அவர் சொன்னார் போன வாரம் சென்றல் ஸ்ரேசனில் ஒரு பெரிய சூக்கேசுடன் நின்று கொண்டு இருந்தேன். பக்கத்திலே ஒருவர் நின்று கொண்டு இருந்தார்.

அவரிடம் சொல்லி இந்த சூக்கேசை கொஞ்சம் பார்த்துக் கொள்ளுங்கள் அதோ அங்கே சென்று தண்ணீர் குடித்து விட்டு வந்துவிடுகிறேன் என்றேன். சரி என்றார்.

நான் சென்று தண்ணீர் குடித்துவிட்டுப் பார்த்தேன் அந்த ஆளையும் காணவில்லை, என் சூக்கேசையும் காணவில்லை. களவெடுத்து போய்விட்டான் சேர் என்றார்.

ஐயோ பாவம் என்றேன் உண்மையைப் பேசவேண்டும் என்று சொல்லுகின்றீர்களே அதனாலே வந்த கஷ்டம்தான் சேர் அது என்றார். என்று கேட்டேன்

பெட்டியை பார்த்துக்கொள்ளுங்கள் என்று நான் சொன்னபோதே அவர் பெட்டிக்குள்ளே என்ன இருக்கு என்று கேட்டார். நான் உண்மையைச் சொல்லிவிட்டேன்.

15, 000 ரூபாய் பணம் இருக்கு என்று சொல்லிவிட்டு புலம்ப ஆரம்பித்து விட்டார். சத்தியம் பேசுவது உத்தமமான காரியம் தான் அதிலே ஒன்றும் சந்தேகம் வரவேண்டியது இல்லை. ஆனால் தர்மம் என்கிறது மிகவும் சூட்சுமமாக உள்ளது.

எது தர்மம் - எது அதர்மம் என்று நமக்கு புரிவதில்லை. அதனாலே தான் சத்தியம் பேசுகின்றேன் என்று சொல்லிவிட்டு சங்கடத்திலே மாட்டிக்கொள்கின்றோம்.

கௌசிகர் என்று ஒரு முனிவர் இருந்தார். உடனே உனக்கு ரொம்ப பழக்கமாக அவர் என்று கேட்காதீர்கள் புராண காலத்து முனிவர் அவர்.

பொய் சொல்லாதவர் என்று அவர் பெயர் வாங்கியிருந்தார். அவர் ஒரு காட்டிலே இருந்தார். அப்போது ஒரு நாள் சில பேர் பயந்து கொண்டு அந்தப் பக்கமாக ஓடி வந்தார்கள். என்ன விடயம் என்று கேட்டார்.

திருடர்கள் சிலபேர் எங்களைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள். அது தான் இந்தப் பக்கமாக ஓடி வந்தோம் என்று சொல்லிக்கொண்டு ஓடிப்போய் புதர் மறைவிலே ஒளிந்து கொண்டார்கள்.

அவர்கள் ஒளிந்திருக்கின்ற இடம் முனிவருக்குத் தெரியும். கொஞ்ச நேரத்திலே அந்தத் திருடர்களும் அந்தப் பக்கமாக ஓடி வந்தார்கள். முனிவரைப் பார்த்தார்கள். அவர் பொய்யே பேசாதவர் என்பது அவர்களுக்குத் தெரியும்

சுவாமி நீங்கள் பொய்யே சொல்லாதவர். அதனாலே எங்களுக்கு ஒரு உண்மையை நீங்கள் சொல்ல வேண்டும். எங்களுக்கு பயந்து கொண்டு இந்தப் பக்கமாக சில பேரு ஓடி வந்தார்களே அவர்கள் எங்கே ஒளிந்து கொண்டு இருக்கிறார்கள் என்று கேட்டார்கள்.

முனிவர் தான் பொய் சொல்ல மாட்டாரே. உடனே அவர்கள் ஒளிந்து கொண்டிருந்த இடத்தை காட்டிக் கொடுத்து விட்டார்.

திருடர்கள் நேராகப் போனார்கள். அவர்களை கொன்று விட்டு அவர்களிடம் இருந்ததை எல்லாம் எடுத்துக் கொண்டு போய் விட்டார்கள்.

உண்மை பேசிய அந்த முனிவர் சொர்க்கத்துக்குப் போகவில்லையாம் நேராக நரகத்துக்குப் போய் விட்டாராம்.

இந்தக் கதையை ஸ்ரீ கிருஷ்ணர் சொன்னார்.

அதைக் கேட்ட அர்ச்சுனனுக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

இது என்ன வேடிக்கையாகயிருக்கு! சத்தியம் சொன்னதுக்கு நரகமா என்று கேட்டார். இதற்கு கிருஷ்ணர் பதில் சொன்னார் உண்மை பேசுவதனாலே ஏற்படும் ஒரு நன்மையை பொய் பேசுவது கொடுக்கும் என்றால் அந்த சமயத்திலே பொய்தான் உண்மை!

அதே மாதிரி பொய் பேசுவதனால் ஏற்படும் ஒரு தீமையை உண்மை பேசுவது கொடுக்கும் என்றால் அப்போது அந்த உண்மை தான் பொய்

எந்த தர்மமாக இருந்தாலும் சரி அதனாலே இன்னொருத்தருக்கு இம்சை விளையும் என்றால் அது அதர்மம்.

சத்தியம் பேசுவதனால் ஒரு தீமை விளையும் என்று வைத்துக் கொள்ளுங்கள் அந்த சமயத்திலே மௌனமாக இருந்து விடுவது தான் நல்லது. அப்படியிருக்க முடியவில்லை என்றால் பொய் சொல்லலாம் அதனால் பாவமில்லை.

விவாக சமயங்களில் மனைவியுடன் தனித்து இருக்கும் போது எவர் உயிருக்காவது ஆபத்து ஏற்படும் சமயங்கள், வேடிக்கையாக பேசும் சமயங்கள், இது மாதிரி நேரங்களில் எல்லாம் பொய் சொன்னால் பாவமில்லை என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதனாலே தான் சில வீடுகளிலே பாருங்கள் வீட்டுக்கார அம்மா ஞாபக மறதியால் கோப்பியிலே சர்க்கரைக்குப் பதிலாக உப்பைப் போட்டுக்கொண்டு வந்து வைத்துவிட்டு கோப்பி எப்படி என்று அபிப்பிராயம் வேறு கேட்பார்.

இவரும் மிகவும் சாமர்த்தியமாக இந்தக் கோப்பிக்கு ஈடு இணை இந்த உலகத்திலேயே கிடையாது என்று சொல்லிவிடுவார். அதுமட்டுமில்லை அதை ரசிச்சும் சாப்பிடுவார். உண்மையைச் சொல்லி அதாவது ஒரு சத்தியத்தை பேசி ஒரு இம்சையை என்னதுக்கு விலைகொடுத்து வாங்க வேண்டும் என்பதற்காக அவர் இப்படி செய்கிறார்.எது தர்மம் எது அதர்மம் என்கின்ற விடயத்திலே இவர் மிகவும் கில்லாடிஅர்ஜுனனுக்கு கிருஷ்ணர் பாடம் சொன்னார். இவர் அவருக்கே பாடம் சொல்லிக் கொடுப்பார் போல இருக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சங்கு’ சின்னத்திற்கே எமது ஆதரவு

## தமிழர் விடுதலைக் கூட்டணி

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கே எமது ஆதரவு என தெரிவித்த தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் பரமசிவம் சிறீதரன், தமிழ் மக்கள் அனைவரும் ‘சங்கு’ சின்னத்திற்கு வாக்களித்து தமது வரலாற்று கடமையை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.


அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-33)

## ‘எழில்’ குறும்படம் திரையிடலும் கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பல்சமய கருத்தாடல் நிலைய சகவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் விமல் ராச்சின் “எழில்” குறும்படம் திரையிடலும் கலந்துரையாடலும் நாளை மறுதினம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஸ்ரான்லி வீதியிலுள்ள செல்வா மினி திரையரங்கில் காலை 10 மணிக்கு இடம்பெறும். ஈழ சினிமா ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி)

# யாழ்.நகர் பகுதியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட தேரர்



(யாழ்ப்பாணம்)

ஜனசெத பெரமுனவின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையப் பகுதியில் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

இதன்போது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணத்தை விளக்கும் சிங்கள மற்றும் தமிழ் மொழியிலான துண்டுப்பிரசுரங்கள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உழவு இயந்திர சின்னத்தில் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-33)



பருத்தித்துறை அஞ்சலகத்தில் அஞ்சலதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் சென்ற அ.அருளானந்தசோதியின் மணிவிழா பருத்தித்துறை அஞ்சல் சமூகத்தினரால் கொண்டாடப்பட்டது.

# மாற்குவின் போர்க்கால ஓவியக்காட்சி

(யாழ்ப்பாணம்)

“அசாதாரணங்களின் காலம்: மாற்குவின் போர்க்கால ஓவியங்கள்” என்னும் தலைப் பிலான ஓவியக்காட்சி எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத்துறைக் கூடத் தில் நடைபெறவுள்ளது.

இதை இலவசமாக பார்வையிட முடியும் என நுண்கலைத் துறை தலைவர் பா.அகிலன் அறிவித்துள்ளார். (நி)

## சஜித்திற்கு ஆதரவு தெரிவித்து

# ஆளுநர் பதவியை இராஜினாமா செய்த முஸம்மில்

(கொழும்பு)

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை அனுப்பி தான் இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக முஸம்மில் அந்த கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# 24 மணித்தியாலத்தில் 132 தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கடந்த இருபத்தி நான்கு மணித்தியாலங்களில் மேலும் 132 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி மொத்த தேர்தல் முறைப்பாடுகளின் எண்ணிக்கை 2027 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று முன்தினம் வரை இந்த முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 846 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1381 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி)


# பெறுகை அறிவித்தல்

## நகராட்சி மன்றம், சாவகச்சேரி

தலைவர் பெறுகைக் குழு நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்களினால் 01.01.2025ஆம் திகதி தொடக்கம் 31.12.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகைபிணை வைப்பு (ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/41(3)1/OS/01/SES/2025 | பாதுகாப்புச் சேவை | 09 | 73,000.00 | 06.01.2025 |
| NP/14/41(3)1/OS/02/CLS/2025 | சுத்திகரிப்புச் சேவை | 11 | 97,000.00 | 06.01.2025 |
| NP/14/41(3)1/OS/03/FLS/2025 | வெளிக்களத் தொழிலாளர் சேவை | 03 | 25,000.00 | 23.12.2024 |
| NP/14/41(3)1/OS/04/DRS/2025 | சாரதி சேவை | 02 | 17,000.00 | 31.12.2024 |
| NP/14/41(3)1/OS/05/ELS/2025 | மின்னிணைப்பாளர் | 02 | 17,000.00 | 10.12.2024 |

1. இக்கேள்வி தேசிய போட்டிக்கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக்காரியாலயம் யாழ்மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, நகராட்சிமன்றம் சாவகச்சேரியின் தொலைபேசி இலக்கம் 021 227 0041 தொலைநகல் 021 227 0079 மின்னஞ்சல் chavauc@gmail.com இன் மூலம் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. சேவை வழங்குனர்கள் நகராட்சிமன்ற அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **09.09.2024 தொடக்கம் 23.09.2024 ஆம் திகதி பி.ப 03.00 மணிவரை** மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக **ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக)** இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் **24.09.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். குறித்த நேரத்திற்குப் பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்.
8. பெறுகைப்பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் **இடதுபக்க மேல்மூலையில் பெறுகை இலக்கம்** எழுதப்படல் வேண்டும்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்விகோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **18.09.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** சாவகச்சேரி நகராட்சிமன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**நகராட்சிமன்றம்,**
**சாவகச்சேரி.** (சி-1124)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 573





வேல் பிடித்த வீரர்கள், விருதுகளைச் சுமந்தவர்கள், குதிரைகள் ஏறி வந்தவர்கள் இவ்வளவு பேருக்கும் நடுவில் தாமரைப் பூ வடிவமாக அமைந்த ஒரு தங்க ரதம். ஆஹா! அந்த ரதத்தில் வீற்றிருப்பது யார்? இளவரசர் மதுராந்தகத் தேவர் அல்லவா? கடம்பூர் அரண்மனையிலும் தஞ்சாவூர் பொக்கிஷ நிலவறையிலும் பார்த்த அதே இளவரசர்தான்! கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு யுக்தி என்னவென்பது உடனே வந்தியத்தேவன் மனத்தில் தோன்றி அவனுக்கு உணர்ச்சியூட்டிவிட்டது.

"ஆபத்து வரப்போகிறது என்ற வார்த்தை காதில் விழுந்தால் அதைப்பற்றி அறிந்துகொள்ள விரும்பாதவனை இதுவரை நான் பார்த்ததில்லை.- இவ்விதம் காலாமுகர்களில் ஒருவர் கூறிய வார்த்தைகள் அவன் மனத்தில் பதிந்திருந்தன. அவனே அந்த ஆவலுக்கு இடங்கொடுத்து விட்டான் அல்லவா? அந்தக் காலாமுகரின் யுக்தியை இங்கே கையாண்டு பார்க்க வேண்டியதுதான். தாமரை மலரின் வடிவமான தங்க ரதத்தை நோக்கி வந்தியத்தேவன் களைப்படைத்திருந்த தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான். மதுராந்தகத்தேவருடைய பரிவாரங்களில் யாரும் அவ்விதம் ஒருவன் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் அவனை யாரும் தடுக்க முன்வருவதற்குள் குதிரை ரதத்தின் சமீபத்தை அடைந்து விட்டது. அந்தச் சமயத்தில் வந்தியத்தேவன் குதிரைமீது எழுந்து நின்றான். ரதத்தில் வீற்றிருந்த மதுராந்தகரை உற்றுப் பார்த்தான். பார்த்துவிட்டு, "ஓ! அபாயம்!" என்று ஒரு குரலைக் கிளப்பினான். உடனே தடால் என்று குதிரை மீதிருந்து தரையில் விழுந்து உருண்டான். குதிரை சில அடிதூரம் அப்பால் சென்று நின்றது.

இவ்வளவும் சில வினாடி நேரத்தில் நடந்துவிட்டது. மதுராந்தகத்தேவரின் பரிவாரத்தைச் சேர்ந்த சிலர் அவனுடைய குதிரை ரதத்தை நோக்கிப் போவதை கண்டு அவசரமாகக் கத்தியை உறையிலிருந்து எடுத்தார்கள். சிலர் வேலை எறிவதற்குக் குறிபார்த்தார்கள். அதற்குள் அவன் குதிரைமேல் நிற்க முயன்று கீழேயும் விழுந்து விட்டபடியால் அவர்களுடைய கவலை நீங்கியது.

பிறகு கீழே விழுந்தவனைப் பார்த்து எல்லாரும் சிரித்தார்கள் மதுராந்தகரும் சிரித்தார். அதற்குள் ரதம் நிறுத்தப்பட்டிருந்தது. அவர் கையைக் காட்டி சமிக்ஞை செய்யவே, வீரர்கள் இருவர் வந்தியத்தேவன் அருகில் சென்று அவனைத் தூக்குவதற்கு முயன்றார்கள். அதற்குள் அவனே எழுந்து உட்கார்ந்திருந்தான். வீரர்களுடைய உதவியில்லாமல் குதித்து எழுந்து நின்றான். தான் விழுந்தது பற்றிச் சிறிதும் கவனியாதது போல இளவரசர் மதுராந்தகரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவனை இப்படி அருகில் கொண்டு வாருங்கள்!" என்றார் இளவரசர். வீரர் இருவரும் வந்தியத்தேவனை கையைப் பிடித்து அழைத்துச்சென்று ரதத்தின் பக்கத்தில் நிறுத்தினார்கள். இன்னமும் அவனுடைய கண்கள் மதுராந்தகர் முகத்தின் பேரிலேயே இருந்தன. "அப்பனே! நீ யார்?" என்று இளவரசர் கேட்டார்.

"நான் நான்தான்! சக்கரவர்த்திப் பெருமானே! என்னைத் தெரியவில்லையா?" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன உளறுகிறாய்?.. அடே! நீங்கள் சற்று விலகி நில்லுங்கள்" என்றார் மதுராந்தகர். மற்ற வீரர்களைப் பார்த்து வீரர்கள் விலகினார்கள்.

"என்னை யார் என்று எண்ணிக் கொண்டாய்?" என்று மறுபடியும் மதுராந்தகர் கேட்டார்.

"மன்னிக்க வேண்டும் இளவரசே! தவறாகச் சொல்லிவிட்டேன். தாங்கள் இன்னும் இன்னும்" என்று தட்டுத் தடுமாறிப் பேசினான்.

"இதற்கு முன் எப்பொழுதாவது என்னை நீ பார்த்திருக்கிறாயா?" "பார்த்திருக்கிறேன் இல்லை பார்த்ததில்லை"

"என்னைப் பார்த்திருக்கிறாயா? இல்லையா? உண்மையைச் சொல்!"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்



## எல்லோருக்குமே பேப்பே தான்!

செட்டியார் ஒருவர் பணம் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார்.

கரும்புகளையும், நெல்லையும் கொள்முதல் செய்தார். ஆலைகளுக்கு மாட்டு வண்டியில் ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்தார். அது கௌரவமாகத் தோன்றவில்லை. அதனால் இரண்டு லொறிகள் வாங்கி அதில் சரக்குகளை அனுப்பிக் கொண்டிருந்தார். நல்ல லாபமும் கிடைத்தது.

சில மாதங்களுக்குப் பிறகு, இரண்டு லொறிகளும் விபத்துக்குள்ளாகி, பெருத்த சேதம் ஆயின.

கரும்பு அனுப்புவதும் தடைப்பட்டது. நெல் விலையும் குறைந்தது. வியாபாரம் சரியாக நடைபெறவில்லை. பெருத்த நட்டம் உண்டாயிற்று. கடன்களை செலுத்த முடிய வில்லை, செட்டியார் திணறினார். தன்னுடைய நண்பர் வழக்கறிஞரிடம் நிலைமையைக் கூறி, அவரிடம் ஆலோசனை கேட்டார் செட்டியார்.

அவர், " இந்தக் கடன் தொல்லையிலிருந்து மீள ஒரு வழி உண்டு உங்கள் குடும்பத்தை சொந்த ஊருக்கு அனுப்பிவிட்டு, நீங்கள் மட்டும் இருங்கள். யாரிடமும் எதுவும் பேசாமல், என்ன கேட்டாலும், "பேப்பே" என்று மட்டும் சொல்லுங்கள். என்று ஆலோசனை கூறினார்.

செட்டியாருக்கும் அது சரியான யோசனை என்று தோன்றியது.

கடன் கொடுத்தவர்கள் வந்து கேட்டால், செட்டியார் தலையை ஆட்டி, முகத்தைச் சுளித்துக் கொண்டு, "பேப்பே" என்று சொல்லலானார்.

"பாவம், செட்டியாருக்கு ஏற்பட்ட நஷ்டத்தினால், அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. அவரை தொந்தரவு படுத்தக்கூடாது என்று எண்ணி கடன் கொடுத்தவர்கள் பிறகு வருவதே இல்லை.

செட்டியார் நிம்மதியானார். பல மாதங்களுக்குப் பிறகு, வழக்கறிஞர் வந்து, "இப்பொழுது எப்படி இருக்கிறீர்? எனக்கு ஆலோசனைக் கட்டணம் தாருங்கள்" என்று கேட்டார்.

அதற்கு செட்டியார் "பேப்பே" என்றார். வேறு எதுவும் பேசவில்லை.

எனக்குமா "பேப்பே" என்று கேட்டார் வழக்கறிஞர்.

உமக்கும் "பேப்பே" உங்க அப்பனுக்கும் "பேப்பே" என்றார் செட்டியார்.

வழக்கறிஞர் மிகுந்த வருத்தத்தோடு, தீட்டின மரத்தையே பதம் பார்க்கிறான் செட்டி என்று சொல்லிவிட்டுச் சென்றார். மற்றவர்களை ஏமாற்றும்படி சொல்லிக் கொடுத்த யோசனைப் படி அவரையும் ஏமாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும்வரை முயற்சி செய் உன்னால் முடியும் வரை அல்ல. நீ நினைத்ததை முடிக்கும் வரை.

~ அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விருப்பு வாக்குப் பற்றி அதிக கவனம் செலுத்துங்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடந்து வருகிறது.

பொதுவில் வாக்காளர்கள் புள்ளடியிடுகின்ற நடைமுறையையே பின்பற்றுகின்றனர்.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த வரை விருப்பு வாக்கு அளிக்கின்ற நடைமுறை உண்டு.

அதாவது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களில் முதலாவது, இரண்டாவது, மூன்றாவது விருப்பை 1, 2, 3 என்ற இலக்கத்தின் மூலம் தெரியப்படுத்த முடியும்.

ஆனால் புள்ளடியிடுவதாயின், அதனை ஒரு வேட்பாளருக்கு மட்டுமே வழங்கலாம்.

அதாவது புள்ளடியிடும்போது இரண்டாவது விருப்பு வாக்கு அங்கு இல்லாமல் போகிறது.

இதை நாம் கூறும்போது, புள்ளடியிடுவதன் மூலம் எங்கள் வாக்கை நாம் ஒரு வேட்பாளருக்கு வழங்குகிறோம் தானே என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்பதில் நியாயம் உண்டு. ஆனால் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்த வரை அளிக்கப்பட்ட வாக்குகளில் 51 சதவீதமான வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் இருக்கின்றவரே ஜனாதிபதியாக வர முடியும்.

இங்கு 51 சதவீத வாக்குகளை எந்த வேட்பாளரும் பெற்றுக் கொள்ளவில்லையாயின், இரண்டாவது விருப்பு வாக்கு கணக்கிலெடுக்கப்படும்.

அதாவது இரண்டாவது விருப்பு வாக்கின் அடிப்படையிலேயே ஜனாதிபதி யார் என்ற முடிவு எட்டப்படும்.

ஆக, நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளரும் 51 சதவீத வாக்குகளைப் பெற முடியாது என்ற கணிப்பு உள்ளது.

இதனை மறைமுகமாக உணர்த்துவது போல, இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய தேவை ஏற்படலாம் என்பதால், தேர்தல் உத்தியோகத்தர்கள் அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என தேர்தல் ஆணையாளர் கூறியிருப்பது இங்கு நினைவுபடுத்துதற்குரியது.

ஆகவே, வாக்காளப் பெருமக்கள் இரண்டாவது விருப்பு வாக்கையும் அளிக்க வேண்டும். அப்போதுதான் வாக்குகள் சரியாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பதாகப் பொருள்படும்.

எதுஎவ்வாறாயினும் நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தல் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதாக இருக்க வேண்டும்.

அதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல் திணைக்களம், தேர்தல் உத்தியோகத்தர்கள் அனைவரும் பக்கம் சாராமல், சரியானதும் நேர்மையானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்வது அவசியம்.

அதேநேரம் தேர்தல் சார்ந்த கண்காணிப்பு அமைப்புகள் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காகத் தங்களைத் தயார் செய்வதும் கட்டாயமானது.

# கடந்தகால இன்னல்களைத் தீர்ப்பதற்கான அடையாளமாக இந்தத் தேர்தல் இருக்கும்

## தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

கடந்தகால இன்னல்களைத் தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இந்தத் தேர்தல் இருக்கும். எனத் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளதுடன் தேர்தலின் பின்னர் தமிழரசுக்கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன் என்று தெரிவித்தார்.

நமக்காக நாம் என்ற தேர்தல் பிரச்சாரப் பணிக்காக புதன்கிழமை வவுனியாவிற்கு விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் நல்ல உத்வேகத்துடன் இருக்கின்றனர். சங்குச் சின்னத்துக்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டனர். கடந்த எட்டு ஜனாதிபதிகளாலும் நாங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றோம், பல துன்பங்களைச் சந்தித்திருக்கின்றோம்.

இந்தத் தேர்தல் என்பது நான் வெற்றிபெறுவதற்கானதல்ல. இனம் வெற்றிபெறவேண்டும் என்பதுவே எனது இலக்கு. இனத்தின் அடையாளமாகவே நான் நிறுத்தப்பட்டிருக்கின்றேன். எனது சின்னத்துக்கு வாக்களிக்கும் ஒவ்வொருவரும் உங்களுக்கு நீங்களே வாக்களிப்பதாகவே அர்த்தம்.

கடந்தகால இன்னல்களைத் தீர்ப்பதற்கான இலக்காகவும் அடையாளமாகவும் இந்தத் தேர்தல் இருக்கும். இந்தத் தேர்தலின் முடிவுகள் சர்வதேசத்தின் மனசாட்சியை நிச்சயம் உறுத்தும். இந்தியாவிற்கும் ஒரு செய்தியினை சொல்லும். தமிழர்களுக்குச் சுயநிர்ணய உரிமையினை வழங்கவேண்டும் என்று அரசையும் வலியுறுத்தும்.

கடந்தகாலங்களில் பலபோராட்டங்களைத் தமிழினம் கண்டுள்ளது. இது புள்ளடி போடும் ஒரு போராட்டம். அனைவரும் இந்தப் பணியினை உறுதியுடன் செய்ய வேண்டும்.

எனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மீனவர் பிரச்சினை, விவசாயிகள் பிரச்சினை உள்ளடக்கப்பட்டிருந்தது. அது பிரதி எடுக்கப்படும்போது தற்செயலாகவே விடுபட்டுள்ளது. அந்த விடயங்கள் இறுதிப்பிரசுரத்தில் நிச்சயம் உள்ளடக்கப்படும். மீனவர் பிரச்சினை என்பது பாரியபிரச்சினை. இந்தியாவைப் பகைப்பதற்கும் வெறுப்பதற்கும் அப்பால் இந்தியாவை அணைத்துக் கொண்டு மீனவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

அத்துடன் தேர்தலின் பின்னரும் நான் இலங்கை தமிழரசுக்கட்சியுடன் மாத்திரமே பயணிப்பேன். அதில் மாற்றுக் கருத்தில்லை. கட்சியால் என்னிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது. சந்தர்ப்பம்வரும்போது அதற்கான விளக்கத்தினை அவர்களுக்கு வழங்குவேன் என்றார். (ம-7)

## வட்டுக்கோட்டையில் வன்முறை கும்பல் வீடு புகுந்து தாக்குதல்

### சந்தேகநபர் ஒருவர் கைது

வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கணவத்தை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சிறுவர்கள், பெண் உட்பட ஐவர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததுடன், ஊரவர்கள் இணைந்து, வன்முறையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்யுமாறு கூறி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கவனயீர்ப்பிலும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், விரைந்து செயற்பட்ட வட்டுக்கோட்டைப் பொலிஸார், சம்பவம் இடம்பெற்ற வீட்டினைப் பார்வையிட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன், அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய ஐவரையும் கைது செய்யும் நடவடிக்கைகளிலும் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

## ஏரம்பு சுப்பையாவின் நூற்றாண்டு நிறைவு நிருத்திய ஆராதனை

*(யாழ்ப்பாணம்)*

கொக்குவில் கலா பவனத்தின் ஏற்பாட்டில் அமரர் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் நூற்றாண்டு நிறைவு நிருத்திய ஆராதணை "பரமகுரு சமர்ப்பணம் - பாகம் 2" நிகழ்வானது நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில்மாலை 3.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கழைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராஜா அவர்களும் சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ம-7)

## தெல்லிநகர் துர்காதேவிக்கு இன்று திருமுறை விழா

தெல்லிப்பழை அருள் மிகு துர்க்காதேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவத்தில் இன்று திருமுறைத்திருவிழா இடம் பெறவுள்ளது.

இன்று மாலை 5 மணியளவில் வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று அதனைத் தொடர்ந்து எம்பிராட்டியார் திருமுறைகள் ஒலிக்க இருவீதியுலா வந்து அருள் பாலிக்கவுள்ளார். (ம-7)

### இருபாலை கற்பக விநாயகராலய

## விநாயகர் சதுர்த்தி விஷேட தீர்த்தவாரி

இருபாலை கற்பக விநாயகர் தேவஸ்தான விநாயகர் சதுர்த்தி உற்சவமானது நாளைய தினம் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் காலை 6.00 மணிமுதல் மாலை 3.00 மணி வரை அடியவர்கள் ஆலயத்தில் அமைந்துள்ள சதுர்த்தி பிள்ளையாருக்கு தமது கரங்களாலேயே கற்பகப் பிள்ளையார் தீர்த்த புஸ்கரணியில் இருந்து நீரெடுத்து அபிஷேகம் செய்ய முடியும் என தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

தொடர்ந்து மாலை விஷேட பூஜைகள், அபிஷேக ஆராதனைகளும் இடம்பெற்று விநாயகப் பெருமான் வெளிவீதியுலாவந்து அருள்பாலிக்கவுள்ளார். (ம-7)

## நாகதம்பிரானின் அலங்கார உற்சவம்

நாகர்கோவில் பூர்வீக நாகதாம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் வியாழக்கிழமை 12ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் இடம் பெறவுள்ளது.

அந்த வகையில் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாம்புத் திருவிழாவும், 18 ஆம் திகதி புதன்கிழமை கப்பல் திருவிழாவும், 19ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 21 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம் பெறும் என ஆலய பரம்பரை நம்பிக்கைப் பொறுப்பாளரும்பரிபாலன சபையினரும் அறிவித்துள்ளனர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்



## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

05

பாராளுமன்றத்தில் எளிதான அதிக வாக்குகள் மூலம் இப்பட்டியல்களைத் திருத்த இயலும் என்பது குறிப்பிடத்தகுந்தது.

அசாம், திரிபுரா மேகாலயா, மிசோரம் மாநிலங்களில் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகளின் மேலாண்மைப் பற்றி ஆறாவது பட்டியல் விபரிக்கிறது. இப்பட்டியலும் எளிமையான அதிக வாக்குகள் மூலம் பாராளுமன்றத்தில் திருத்தப்படலாம்.

மத்திய - மாநில அரசுகளின் அதிகாரம் செயற்பாடுகள் பற்றி ஏழாவது பட்டியல் விளக்குகிறது. இதில் மேலும் மூன்று பட்டியல்கள் இடம்பெற்றுள்ளன. அவை கீழே தரப்பட்டுள்ளன.

**(1) மத்திய அரசின் பட்டியல்**

இது ஒன்றிய அரசுக்கு உள்ள அதிகாரங்கள் பற்றியது. ஒன்றியப் பட்டியலில் மொத்தம் 100 துறைகள் உள்ளன. இவற்றில் சட்டம் இயற்றும் அதிகாரம் கொண்டது ஒன்றிய அரசு, பாதுகாப்பு, அணுசக்தி, தேசிய நெடுஞ்சாலைகள், விமான, கப்பல் போக்குவரத்துக்கள், காப்பீட்டுக் கழகங்கள், மக்கள்தொகை, நதிகள், தொலைபேசி, பண அச்சடிப்பு இது போன்ற முக்கியமான 100 துறைகள் (ஆரம்பத்தில் 97 துறைகள்) ஒன்றிய அரசின் அதிகாரத்தில் உள்ளன.

**(2) மாநிலப்பட்டியல்**

இது மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்கள் பற்றியது. ஆரம்பத்தில் மாநிலப் பட்டியலில் இருந்த துறைகள் 66. இவற்றில் கல்வி, விளையாட்டு, வனவியல், வனவிலங்கு பாதுகாப்பு, எடைகள் (ம) அளவீடுகள், நீதி நிர்வாகம் ஆகிய 5 உம் பொதுப்பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டமையால், தற்போது 61 துறைகள் மட்டுமே மாநில அரசின் அதிகாரத்திற்குள் வருகின்றன. வேளாண்மை வருமான வரி, நகராட்சி, சிறைச்சாலைகள், சுங்கக் கட்டணங்கள், கேளிக்கை வரி போன்ற 61 துறைகள் மாநிலப்பட்டியலில் உள்ளன. இத்துறைகளில் சட்டம் இயற்றும் உரிமை பெற்றவை மாநில அரசுகள் ஆகும்.

**(3) பொதுப்பட்டியல்**

இது ஒன்றிய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் உள்ள பொதுவான அதிகாரங்களைப் பற்றிப் பேசுகிறது. பொதுப் பட்டியலின் தொடக்கத்தில் 47 துறைகள் இருந்தன. இவற்றில் கல்வி, வனவியல், வனவிலங்கு பாதுகாப்பு, எடைகள் (ம) அளவீடுகள், நீதி நிர்வாகம் பொதுப் பட்டியலுக்குக் கொண்டு வரப்பட்டதால் தற்போது பொதுப்பட்டியலில் உள்ள துறைகள் மொத்தம் 52. காடுகள், மின்சாரம், தொழிற்சாலைகள், உணவுப் பொருட்கள், திருமணம், கல்வி, விளையாட்டு உட்பட 52 துறைகள்மீது சட்டம் இயற்றும் அதிகாரம் பெற்றவை ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் ஆகும்.

**பதினோராவது பட்டியல்**

பஞ்சாயத்து மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சுயாட்சி அதிகாரம் பற்றி பதினோராவது பட்டியல் விளக்குகிறது. 1992 ஆம் ஆண்டு 73 ஆவது சட்டத் திருத்தத்தின்படி 29 துறைகளில் பஞ்சாயத்து அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

**பன்னிரெண்டாவது பட்டியல்**

இது நகரபாலிகா மற்றும் நகரப் பஞ்சாயத்துகளுக்கு வழங்கப்பட்டுள்ள சுய அதிகாரம் தொடர்பான பன்னிரெண்டாவது பட்டியலாகும். 1992 இல் 74 சட்டத்திருத்தத்தின்படி இது அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது. நகரப் பஞ்சாயத்துக்கள் 18 துறைகளில் பெற்றுள்ள அதிகாரங்கள் பற்றி இப்பட்டியலில் விளக்கப்பட்டுள்ளன. எதிர்த்து வழக்கு போடுவதையும் இது தடை செய்தது.

அடுத்ததாக அமெரிக்காவின் கூட்டாட்சி அரசியல் அமைப்பினைப் பார்போம்.

**ஐக்கிய அமெரிக்காவின் மாநிலங்கள் எவ்வாறு தோற்றம் பெற்றன?**

தற்போது ஐக்கிய அமெரிக்கா என அறியப்படும் நிலப்பகுதிகளில் ஐரோப்பிய குடியேற்றவாதிகள் வருவதற்கு முன்னமேயே உள்நாட்டுத் தொல்குடியினர் வாழ்ந்து வந்தனர். 1600இற்குப் பிறகு ஐரோப்பிய குடியேற்றங்கள் உருவாகத் தொடங்கின. 1770களில் பதின்மூன்று பிரித்தானியக் குடியேற்றங்களில் இரண்டரை மில்லியன் மக்கள் வாழ்ந்திருந்தனர்.

அவர்கள் வளமாகவும் தங்களுக்கான தனிப்பட்ட அரசியல் மற்றும் சட்ட முறைமைகளைக் கொண்டிருந்தனர். பிரித்தானிய பாராளுமன்றம் இந்தக் குடியேற்றங்கள் மீது தனது அதிகாரத்தை நிலைநாட்டி புதிய வரிகளை விதித்தது. தங்களுக்கு சார்பாண்மை இல்லாத பிரித்தானிய பாராளுமன்றத்தின் இச்செய்கை சட்டவிரோதமானது என இதனை அமெரிக்கர்கள் எதிர்த்தனர்.

சிறுசிறு கிளர்ச்சிகள் பெரிதாகி ஏப்ரல் 1775இல் முழுமையானப் போராக உருவானது. யூலை 4, 1776இல் இக்குடியேற்றங்கள் தங்களை பெரிய பிரித்தானிய அரசிடமிருந்து விடுதலை பெற்ற தனி நாடாக அறிவித்தன. தோமஸ் ஜெஃவ்வர்சன் இயற்றிய அரசியலைப்புச் சட்டத்தின்படி இக்குடியேற்றங்கள் பதின்மூன்றும் ஒன்றிணைந்து அமெரிக்க ஐக்கிய இராச்சியம் உருவானது.

ஆரம்ப காலத்தில் பதின்மூன்று மாநிலங்கள் பிரித்தானிய ஆட்சியை எதிர்த்து போராடியதால் பதின்மூன்று நாடுகளாக உதித்தன. பிற மாநிலங்கள் போர் மூலமாகவும் அல்லது அமெரிக்காவின் பிராந்தியங்களில் இருந்து பிரிந்தும் உருவானவையாகும். சில மாநிலங்கள் இதற்கு விதிவிலக்கு. விதிவிலக்குகளாக வெர்மான்ட், டெக்சாஸ், மற்றும் ஹவாய் ஆகிய மாநிலங்கள் அடங்கும். இந்த மாநிலங்கள் ஒன்றியத்தில் இணைவதற்கு முன்பு சுதந்திர குடியரசாக இருந்தவை.

மற்றொரு வகை விதிவிலக்கில் தொடக்கத்தில் இருந்த பதின்மூன்று மாநிலங்கள் அடங்கும். நாட்டின் வரலாற்று தொடக்கத்தில், மூன்று வகையில் மாநிலங்கள் உருவாயின. ஒன்று வர்ஜினியாவில் இருந்து கென்டக்கி வடக்கு கரோலினாவில் இருந்து டென்னெஸ் மசாசூட்ஸில் இருந்து மென். இரண்டாவது அமெரிக்க உள்நாட்டு யுத்தத்தின் போது, மேற்கு வர்ஜினியா வர்ஜினியாவில் இருந்து உடைந்தது. இவ்வாறு பிரிந்து அல்லது உடைந்து, இருந்த 13 மாநிலங்கள் பல மாநிலங்கள் ஆயின.

கடைசியாக ஹவாய் தனது மாநில அந்தஸ்தை ஓகஸ்ட் 21, 1959 அன்று பெற்றது. மாநிலங்களுக்கு ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்ல உரிமை இல்லை.

போர்டோ ரீகோ மற்றும் கரீபியனில் உள்ள அமெரிக்க வர்ஜின் தீவுகள், அமெரிக்கன் சமோவா, குவாம், மற்றும் பசுபிக்கில் வடக்கு மரியானா தீவுகள் ஆகிய ஐந்து கடல்கடந்த பிராந்தியங்களையும் அமெரிக்கா கொண்டுள்ளது. இந்த பிராந்தியங்களில் பிறப்பவர்கள் (அமெரிக்கன் சமோவா தவிர) அமெரிக்க குடியுரிமை கொண்டவர்களாவார்கள்.

அமெரிக்காவின் ஐம்பது மாநிலங்களும் அங்கு மக்கள் குடியேறிய ஆண்டும் ஐக்கிய அமெரிக்க ஒன்றியத்தில் நுழைந்த ஆண்டும் அட்டவணை-1 இல் தரப்பட்டுள்ளன. பிரித்தானியப் பேரரசிலிருந்து சுதந்திரம் பெற்ற பதின்மூன்று குடியேற்றங்களும், ஒரே அரசாக எழுச்சி பெறுவதற்குப் பொருத்தமான அரசாங்கம் ஒன்றை உருவாக்கிக் கொண்டமையே அவர்கள் கையாண்ட முதல் நடவடிக்கையாகும்.

அக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் நிலவிய சிறந்த ஆட்சி முறைகளையோ அல்லது தமது தாயகமான பிரித்தானியாவில் வரலாறு பூராகவும் வளர்ச்சியடைந்த பாராளுமன்ற முறையையோ பின்பற்றாது, நிறைவேற்றதிகாரத்துடன் கூடிய கூட்டாட்சி முறை ஒன்றைத் தமக்கென்று உருவாக்கிக்கொண்டனர். இதன் வாயிலாக ஒன்றுக்கொன்று தனித்துவமான பதின்மூன்று குடியேற்றங்களும் ஒன்றிணைந்து ஒரே அரசாக இயங்க ஆரம்பித்தது.

ஒன்றியத்திற்கு புதிய மாநிலங்களைச் சேர்க்கும் அதிகாரத்தை அரசியலமைப்பு பேராயத்திற்கு வழங்கியுள்ளது. 1776இல் நிறுவப்பட்ட பிறகு தொடக்கத்தில் பதின்மூன்றாக இருந்த மாநிலங்கள் தற்போது 50ஆக உயர்ந்துள்ளது. கடைசியாக 1959இல் அலாஸ்காவும் அவாயும் மாநிலங்களாக ஏற்கப்பட்டன. (தொடரும்)

அமெரிக்க மாநிலங்களின் விரிவாக்கம் அட்டவணை-1

| மாநிலம் | A | B | மாநிலம் | A | B |
|---|---|---|---|---|---|
| டெலாவேர் | 1638 | 1787 | மிச்சிகன் | 1668 | 1837 |
| பென்சில்வேனியா | 1682 | 1787 | புளோரிடா | 1565 | 1845 |
| நியூ ஜெர்சி | 1660 | 1787 | டெக்சாஸ் | 1682 | 1845 |
| ஜார்ஜியா | 1733 | 1788 | அயோவா | 1788 | 1846 |
| கனெக்டிகட் | 1634 | 1788 | விஸ்கான்சின் | 1766 | 1848 |
| மாசசூசெட்ஸ் | 1620 | 1788 | கலிபோர்னியா | 1769 | 1850 |
| மேரிலாந்து | 1634 | 1788 | மினசோட்டா | 1805 | 1858 |
| தென் கரோலினா | 1670 | 1788 | ஒரிகான் | 1811 | 1859 |
| நியூ ஹாம்ப்ஷயர் | 1623 | 1788 | கன்சாஸ் | 1727 | 1861 |
| வர்ஜீனியா | 1607 | 1788 | மேற்கு வர்ஜீனியா | 1727 | 1863 |
| நியூயார்க் | 1614 | 1788 | நெவாடா | 1849 | 1864 |
| வட கரோலினா | 1660 | 1789 | நெப்ராஸ்கா | 1823 | 1867 |
| ரோட் தீவு | 1636 | 1790 | கொலராடோ | 1858 | 1876 |
| வெர்மான்ட் | 1724 | 1791 | வடக்கு டகோட்டா | 1812 | 1889 |
| கென்டக்கி | 1774 | 1792 | தெற்கு டகோட்டா | 1859 | 1889 |
| டென்னசி | 1769 | 1796 | மொன்டானா | 1809 | 1889 |
| ஓஹியோ | 1788 | 1803 | வாஷிங்டன் | 1811 | 1889 |
| லூசியானா | 1699 | 1812 | இடாஹோ | 1842 | 1890 |
| இந்தியானா | 1733 | 1816 | வயோமிங் | 1834 | 1890 |
| மிசிசிப்பி | 1699 | 1817 | உட்டா | 1847 | 1896 |
| இல்லினாய்ஸ் | 1720 | 1818 | ஒக்லஹோமா | 1889 | 1907 |
| அலபாமா | 1702 | 1819 | நியூ மெக்ஸிகோ | 1610 | 1912 |
| மைனே | 1624 | 1820 | அரிசோனா | 1776 | 1912 |
| மிசோரி | 1735 | 1821 | அலாஸ்கா | 1784 | 1959 |
| ஆர்கன்சஸ் | 1686 | 1836 | ஹவாய் | 1820 | 1959 |

A- மக்கள் குடியேறிய ஆண்டு B- ஒன்றியத்தில் நுழைந்த ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4 இந்திய...

தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்கள் நேற்று முன்தினம் மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நெடுந்தீவு கடற்பரப்புக்குள் ஒரு படகில் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் நால்வரும் மீன்பிடிக்குப் பயன்படுத்திய படகுடன் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு நேற்று முன்தினம் இரவு கொண்டு செல்லப்பட்டனர். (ம-7)

## 3 பிள்ளைகளின்...

உயிரிழந்தவராவார்.

கடந்த மூன்றாம் திகதி அன்று தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தீ வைத்ததாகவும் இதனைத் தொடர்ந்து அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம்தொடர்பில்யாழ்.போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வாய்க்காலுக்...

விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த சந்திரசேகரம் புவனேஸ்வரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த விபத்துத் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## மாதகல் கடற்...

அதிகாலை கடற்றொழிலுக்காக இருவர் படகொன்றில் சென்றிருந்தபோது, குறித்த படகானது கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அதன்போது படகில் இருந்த இருவரும் கடலில் மூழ்கிய நிலையில், அருகில் மீன் பிடியில் ஈடுபட்டிருந்த சக கடற்றொழிலாளர்கள் அதனை அவதானித்து, படகு கவிழ்ந்த இடத்திற்கு விரைந்து ஒருவரை காப்பாற்றி இருந்தனர்.

சம்பவத்தில் மற்றையவர் கடலில் மூழ்கி காணாமல்போன நிலையில், அவரைத் தேடும் பணிகள் நேற்று முன்தினம் முதல் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் நேற்றுக் காலை காணாமல்போன இளைஞனின் சடலம் கரையொதுங்கியுள்ளது. (ம-7,33)

## திருக்குறள்...

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வட மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், நன்னடத்தை மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள்திணைக்களத்தின் ஆணையாளர் திருமதி சுஜீவா சிவதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி தர்மினி ரஜீபன் வழங்க, ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வரும் வாழ்த்துரையை சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் ஆற்றவுள்ளனர். வெளியீட்டுரையை வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து நூல் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக்கழக கல்வியல் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி வை.விஜயபாஸ்கரன் நிகழ்த்துவார்.

நூலின் முதற்பிரதியை சிவ கணேசன் புடைவையகத்தின் உரிமையாளர் கனகசபை அருள்நேசன் பெற்றுக் கொள்வார். (ம-7)

## கண்ணிவெடி...

குளம்- துணுக்காய் பகுதியில் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த, பணியாளர்கள் நால்வர் கண்ணிவெடி விபத்தில் படுகாய மடைந்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது.

இவ் வெடிவிபத்தில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த நான்கு பணியாளர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த நால்வரில் மூவர் மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ம-7)

## 4 இராஜாங்க...

பதவியில் இருந்து நீக்கியுள்ளார்.

இராஜாங்க அமைச்சர்களான பிரேமலால் ஜயசேகர (துறைமுக மற்றும் விமான சேவைகள்), இந்திக்க அனுருத்த (மின்சாரம் மற்றும் எரிசக்தி), மொஹான் பிரியதர்ஷன டி சில்வா (விவசாயம்) மற்றும் சிறிபால கம்லத் (நெடுஞ்சாலைகள்) ஆகியோர் இவ்வாறு பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 47(3)(ஏ) பிரிவின்படி ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி குறித்த இராஜாங்க அமைச்சர்கள் நீக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. (ம-7)

## ஈழத் தமிழினத்...

கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினதும் ஏற்பாட்டில் பிரித்தானியாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்று, உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தமிழர்களை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத்தின் இருப்புக்காகவும், இறைமைக்காகவும் அரசியற் பணியாற்றுவதற்காகவே நான் இணைந்து கொண்டேன்.

எனது அரசியல் பயணத்தையும், அதுசார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதனால், இறுதிவரை அந்தக் கொள்கையில் பிறழ்வற்றுப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன். அந்த அடிப்படையிலேயே, காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் நான் உறுதியாக உள்ளேன் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். (ம-7)

## அரச...

தனியார் துறை ஊழியர்களுக்கு விசேட விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, முழு சம்பள விடுமுறையின் அடிப்படையில் ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி இலங்கையில் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டிருக்கிறது.

அதற்கமைய 40 கிலோமீற்றர் அல்லது அதற்கு குறைந்த தூரத்துக்கு அரை நாள் (1/2) விடுமுறையும்,

40 கிலோமீற்றருக்கும் 100 கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட தூரத்துக்கு ஒரு நாள் (1) விடுமுறையும்,

100 கிலோமீற்றருக்கும் 150 கிலோமீற்றருக்கும் இடைப்பட்ட தூரத்துக்கு ஒன்றரை (1-1/2) நாள் விடுமுறையும்,

150 கிலோமீற்றருக்கும் மேற்பட்ட தூரத்துக்கு இரண்டு நாட்கள் விடுமுறையும் வழங்குமாறும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 5587
S 2 0 6 7 3 2
அத சம்பத
S 6 7 3 2
சீட்டிழுப்பு இலக்கம் 162

தன நிதானய
திகதி - 2024.09.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1617
X 18 34 45 76 X
00776

மெகா பவர்
திகதி 05/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1935
G 10 37 39 65 71
94254

லக்கி 7 VIP
திகதி 2024.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 413
B 3 7 6 7 6 5 B

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3829
சீட்டிழுப்பு திகதி 05.09.2024
S 21 32 57 78
S 41138

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.05
சீட்டிழுப்பு இலக்கம் 0896
ரிஷபம் 07 20 25 53 ரிஷபம்
62426 07

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.09.2024 வெற்றி வாரம் 295 வர்ணம் மஞ்சள்
H 8 6 2 1 3 0
54058
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,454,952.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2561 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 05.09.2024 தினம் வியாழன்
07 41 50 70 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,037,956.00

சனிதா
திகதி 2024.09.05 வெற்றி வாரம் 4722 வர்ணம் சிவப்பு
14 31 39 40 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,000,000.00
91929

சீட்டிழுப்பு வாரம் 4273 வர்ணம் கபிலம்
சீட்டிழுப்பு திகதி 2024.09.05 தினம் வியாழக்கிழமை
24 31 33 56 விருச்சிகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,222,159.60
201462

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 02 13 32 52 63
1737
05.09.2024 வியாழன்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 543,197,016.20

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2387
சீட்டிழுப்பு திகதி : 2024.09.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.64,525,793.60
08 16 69 72 D
323271

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பருத்தித்துறை-மாதனை
# அருள்மிகு ஸ்ரீ கற்பகப் பிள்ளையார்
## புனராவர்த்தன நவகுண்டபஷ
# மகா கும்பாபிஷேகம்
# 06.09.2024



### ஆசிச்செய்தி

பருத்தித்துறை மாதனை எனும் ஊரில் உறைந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் புனராவர்த்தன நவகுண்டபஷ மகாகும்பாபிஷேக பெருவிழா இன்று நிகழ்வதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

இந்த ஆலயத்தில் புனராவர்த்தன நவகுண்டபஷ மகாகும்பாபிஷேகம் நிகழ்வதற்குக் காரணகர்த்தாவாக விளங்கிய விநாயகப்பெருமானின் அடியவர்களின் அருட்பணி அளப்பரிய சேவை பாராட்டுக்குரியது. 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்கின்ற இக் கும்பாபிஷேகம் காண்பதற்கு பூர்வ ஜென்ம புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். இவ் விழா சிறப்புற எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை வேண்டுகின்றேன்.

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்.**
**நல்லை ஆதீன குருமுதல்வர்.**



### கும்பாபிஷேக பிரதம குருவின் நல்லாசிகள்

இலங்கைத் திருநாட்டில் வட பகுதியில் இந்து சமுத்திரம் புடைசூழ பருத்தித்துறை மாதனை எனும் கிராமத்தில் பல ஆண்டுகளாக வேண்டுவோர்க்கு வேண்டும் அருள் பாலிக்கும் விநாயகப் பெருமானுக்கு குடமுழுக்கு விழா நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

ஆலயம் மிக புதுப்பொலிவுடனும் அழகு சேர்ந்த வர்ண வேலைகளுடன் சிற்பவேலைகளும் கொண்ட பரிவாரமூர்த்திகளும் இராஜகோபுரமும் தூபிகளும் நிர்மாணிக்கப்பட்டு ஆவணி மாதம் 21 ஆம் நாள் 06.09.2024 வெள்ளிக்கிழமை கன்னி இலக்கினமும் அஸ்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுப தினத்தில் காலை 6.49 மணியளவில் இருந்து 8.43 மணிவரையுள்ள சுபவேளையிலே மகாகும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது.

கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற விநாயகப் பெருமானுடைய திருவருள்ப் பேற்றினைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ விநாயகப் பெருமானைத் தொழுவோமாக.

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

**சிவஸ்ரீ சிதம்பர கிருஸ்ணமூர்த்தி குருக்கள்.**
**வேத சிவாகம வித்தியா பூஷணம், கிரியா கிராமஜோதி, சிவாகம பிரதிஸ்டா கிரியா ஜோதி, ஆகம பிரிவினா சிவகாமி அம்மன் தேவஸ்தானம் அச்செழு, மாதனை கற்பகப் பிள்ளையார் கண்ணகை அம்மன் கோவில்.**



### ஆசிச்செய்தி

பருத்தித்துறை - மாதனை அருள்மிகு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் புனராவர்த்தன நவகுண்டபஷ மகா கும்பாபிஷேக பெருஞ் சாந்தி விழாவானது 06.09.2024 வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கு திருவருள் கைகூடியுள்ளது.

மிகவும் அற்புதமாக சிற்பவேலைகள் வர்ண வேலைகள் செய்யப்பட்டு இங்கு வசிப்பவர்களும், பல நாடுகளில் இருந்து வருகை தந்திருப்பவர்களும் ஒன்று கூடி சீரும் சிறப்புமாக கற்பக விக்னேஸ்வரப் பெருமானுக்கு பெருஞ்சாந்தி விழா இன்று நடைபெறுவதை பத்திரிகை வாயிலாகவும் முகநூல் வாயிலாகவும் நேரடியாகவும் தரிசிக்கின்ற அடியவர்கள் அனைவருக்கும் எல்லாம்வல்ல விநாயகப் பெருமானுடைய திருவருள் நிறைந்து மண்ணில் நல்ல வண்ணம் வாழ ஆசிகளைக் கூறுகின்றேன்.

**சிவப்பிரம்ம ஸ்ரீஸதாசிவ சுரேஸ்வரக் குருக்கள்,**
**(சிவாகம பிரதிஷ்டா ஞானபானு, சிவாகமகிரியாநிதி சத்தியாகம ஜோதி)**
**லண்டன் ஈழபதீஸ்வர ஆலயம்,**
**அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலயம்,**
**மாதனை ஸ்ரீ காளியம்மன் ஆலயகுரு.**



### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி

அருள் தரும் ஆனைமுகப் பெருமான் குடி கொண்டுள்ள பருத்தித்துறை மாதனை ஸ்ரீகற்பகப் பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேகம் குறித்து வாழ்த்தி வணங்குவதில் ஆனந்தமடைகிறேன். தெய்வபக்தியை வளர்ப்பதனால் எம் தலைமுறையை சீரான வழியில் வாழவைக்க முடியும். எம்முன்னோர் அரும்பாடுபட்டு அமைத்த ஆலயங்களை நாம் காத்துக் கொள்ளல் அவசியமாகும். அவ்வகையில் மாதனை ஸ்ரீகற்பகப் பிள்ளையார் ஆலயத்தைத் தொடர்ந்து நல்ல முறையில் பேணிக்காக்கும் அனைவரையும் வாழ்த்துகின்றேன். திருப்பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் எனது நல்லாசிகள் உரித்தாகுக.

இன்று எம் சமூகம் அறத்தின் மீது நம்பிக்கை கொள்ள ஆலயங்கள் உதவவேண்டும். ஆலயங்கள் வழிபாட்டுக் கடமையோடு அறப்பணிகள் சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.**
**தலைவர் சிவபூமி அறக்கட்டளை.**




### வாழ்த்துச் செய்தி

"விக்கினேஸ்வரன் அருளால்
வினைதீரும்
கற்பகத்தானின் அருளால் காரியம்
கைகூடும்"

இலங்கைத் திருநாட்டின் வடபகுதி சமுத்திரம் புடைசூழ பருத்தித்துறை மாதனைக் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீகற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் மகாகும்பாபிஷேக பெருஞ்சாந்தி விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவ்தில் பெருமகிழ்வடைவதுடன் இதனை பெரும்பேறாகக் கருதுகின்றேன்.

கலை பண்பாட்டு விழுமியங்கள் நிறைந்த மாதனைக் கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ கற்பகப் பிள்ளையாரின் கருணையால் அவ்வூர் பல பாரம்பரிய கலைகளை இன்றும் போற்றி மெருகூட்டி கலைக் கிராமமாக மிளிர்ந்து வருகின்றது. இவ்வாலயத்தின் சிறப்பான வர்ண வேலைகள், நுட்பமான சிற்ப வேலைகளையுடைய பரிவார மூர்த்தங்கள், இராஜகோபுர சகித தூபிகளுக்கு கும்பாபிஷேகம் நடைபெறும். கைங்காரியம் கைகூடியுள்ள இவ் வேளையில், இச் சக்திமிக்க பிள்ளையாரின் அருளால் இவ்வாலயம் என்றும் தெய்வீக மணம் பரப்பி மக்களின் நலன் காத்து தொழில் வளம் பெருக வேண்டுவதுடன், இங்கு நடைபெறும் மகாகும்பாபிஷேகம் ஊருக்கும் மக்களுக்கும் சிறப்பைத்தர ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றேன்.

**சி.சத்தியசீலன்,**
**பிரதேச செயலாளர், பிரதேச செயலகம்,**
**வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.**



### ஆசிச்செய்தி

இன்று நிகழும் பஞ்சகுண்ட அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழாவில் ஆலயகுரு என்ற வகையில் பங்குபற்றுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நன்நாளில் கற்பகப் பிள்ளையாரின் கருணையை எல்லா மக்களும் பெற்றுச் சிறப்பாக வாழ பெருமானை வேண்டுகின்றேன்.

**ஆலய குரு பிரம்மஸ்ரீ நந்தகோப சர்மா**

(1855)

ஓங்கி உயர்ந்து ஒளிவீசி நிற்கும் எங்கள் மாதனை ஸ்ரீ கற்பகப் பிள்ளையார் கோவிலில் இன்று புனராவர்தன நவகுண்டபஷ மகா கும்பாபிஷேகம் நிகழப் பெருமானாரின் திருவருள் கைகூடியுள்ளது.

அனைவரும் தவறாது வருகைதந்து நடைபெறவிருக்கும் அனைத்துக் கிரியைகளிலும் கலந்து எல்லாம் வல்ல பெருமானாரின் பரிபூரண கிருபாகடாட்சத்தைப் பெற்றேகுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

**மாதனை ஊர் மக்கள்** **மாதனை நலன்கருது சங்கம் இலண்டன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.